REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2024 மார்ச் 11 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 92 இல. 61 | Monday 11, March, 2024 | 16பக்கங்கள் | 50/-

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் புரட்சி ஆரம்பம்

உண்மையான ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையுமாறு ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு அழைப்பு விடுக்கிறேன்

குளியாப்பிட்டியில் ஜனாதிபதி உரை | முதலாவது கூட்டத்தில் மக்கள் திரள்

லோரன்ஸ் செல்வநாயகம்

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் புரட்சியை ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நெருக்கடி நேரத்தில் நாட்டை பொறுப்பேற்காத எவரையும் தாம் குற்றம் சாட்டப் போவதில்லை என தெரிவித்துள்ள ஜனாதிபதி, நாட்டை பொறுப்பேற்பதற்கு முடியாமையே அதற்கு காரணம் என்பது தற்போது உறுதியாகியுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டு பஞ்சாயத்துக் காரர்களின் பிடிக்குள் சிக்கியுள்ள ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஐதேக வினருக்கு இடமில்லை என தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஐக்கிய மக்கள் சக்திக்கு சென்ற அனைத்து ஆதரவாளர்களையும் மீண்டும் தாய்வீட்டுக்கு வருமாறும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

குளியாப்பிட்டி நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பெருந்திரளான 06

ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று

கொழும்பு தினகரன் நிருபர்

ஹிஜ்ரி 1445 புனித ரமழான் மாத தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு இன்று திங்கட் கிழமை (11) மாலை மஹ்ரிபு தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென, கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

புனித ரமழான் மாத பிறை இன்று தென்பட்டால் செவ்வாய்க்கிழமை இலங்கை வாழ் முஸ்லிம்கள் 06

தொல்பொருள் பகுதிகளை பாதுகாப்பதில் பிரதேச பாகுபாடுகள் காட்டப்படாது

மக்களை தூண்டி முறுகலை ஏற்படுத்தும் அரசியல் வேண்டாம்

சுயலாப அரசியல் குழுக்களே மக்களை தூண்டி முறுகல் நிலைமைகளை உருவாக்குவதாக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி பூஜை வழிபாடுகளில் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் நாகரீகம் சம்பந்தமாக பாதுகாக்கப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. இதில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதங்கள் இல்லை.

இலங்கையின் புராதன நாகரீகம் சம்பந்தமான வரலாறுகளை நாம் பாதுகாப்பதுடன், அவற்றை அடுத்த சந்ததிக்கு கடத்துவதே பிரதான 06

உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும் 8,400 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

லோரன்ஸ் செல்வநாயகம்

உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் பணிபுரியும் நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்வாறான ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு துரித நடவடிக்கை 06

இளைஞர்கள் மீது கெப் மோதி மூவர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

சாரதி உட்பட மூவருக்கு விளக்கமறியல்

லோரன்ஸ் செல்வநாயகம்

அனுராதபுரம் ரம்பேவ பிரதேசத்தில் மூவரின் உயிரைக் காவு கொண்ட வாகன விபத்து தொடர்பில், கைதான கெப் வாகனத்தின் சாரதி உள்ளிட்ட மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் மார்ச் (20) வரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் 06

ஜனாதிபதியின் தலைமையில் இன்று IMF பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில், நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்படவுள்ளது. இக்கலந்துரையாடல் இன்று (11) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பில் நடைபெறுகிறது.

இக்கலந்துரையாடலில் பங்கேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பியின் 06

படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகள் மக்களிடம் கையளிப்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த பொதுமக்களின் ஒரு தொகுதி காணிகள் 06

எமது கோரிக்கைகளை நிறைவேற்றுபவருக்கே இ.தொ.கா ஆதரவளிக்கும் 03

நெல் கொள்வனவுக்காக திறைசேரி நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு நிதியுதவி

லோரன்ஸ் செல்வநாயகம்

கொள்வனவுகள் நேற்று ஆரம்பம்

நெல் கொள்வனவு நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் முதற் கட்டமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று சிவப்பு நாட்டரிசி கொள்வனவு செய்யப்பட்டதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இதற்கான பணிப்புரைகளை அமைச்சர் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவருக்கு வழங்கியுள்ளார். இதற்கி ணங்க ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 06

இறக்குமதிக்கான செலவு 14 வீதத்தால் அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் மாத்திரம் நுகர்வோருக்கான பொருட்கள் கொள்வனவுக்காக அரசாங்கம் 9ஆயிரத்து 36 கோடி ரூபாவை செலவு செய்துள்ளதாக, மத்திய வங்கி 06

பாரிய சொத்துக்களுள்ள நபர்கள்: விசேட பிரிவை அமைத்து விசாரணை

லோரன்ஸ் செல்வநாயகம்

பாரிய சொத்துக்களைக் கொண்டுள்ள நூறு நபர்கள் தொடர்பில் தேசிய வருமான வரித் திணைக்களம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக, திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஏ. சேபாலிகா சந்ரசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக உயர் செல்வந்த நபர்கள் தொடர்பான பிரிவு என்ற பெயரில், மேற்படி திணைக்களத்தில் விசேட பிரிவு ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இதன் மூலம் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக 10 விஷேட நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாரிய சொத்துக்களைக் கொண்டுள்ள 06

கோட்டாபய ராஜபக்ஷவின் நூலின் முதல் பதிப்பு முழுமையாக விற்பனை

லோரன்ஸ் செல்வநாயகம்

'என்னை பதவியிலிருந்து வெளியேற்றிய சதிகள்'என்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய நூலின் முதலாவது பதிப்பு, மூன்று தினங்களுக்குள் முழுமையாக விற்பனையாகியுள்ளது. இந்நூல், கடந்த (07) வெளியிடப்பட்டது. இந்நிலையில், நேற்று (10) ஞாயிற்றுக்கிழமை அந்நூலின் முதலாவது பதிப்பு அனைத்தும் விற்பனையாகியுள்ளது. 06

தொழில் உரிமையை பாதுகாக்கும் 'கருசரு' திட்டம் அறிமுகமாகும்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஊடகத்துறை உட்பட பல்வேறு தொழில்துறைகளின் கௌரவம் மற்றும் தொழில் உரிமையை பாதுகாக்கும் வகையில் 'கருசரு' என்ற பெயரில் புதிய 06

சூதாட்ட நிலையத்திலிருந்த எட்டு பெண்கள் கைது; பணமும் மீப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

அளுத்கம நகரில் வீடொன்றில் நடத்தப்பட்டு வந்துள்ள சூதாட்ட நிலையத்தை சுற்றிவளைத்த பொலிஸார், பெண்கள் உட்பட ஒன்பது பேரை கைது செய்துள்ளனர். இந்த சூதாட்ட நிலையம் சொகுசு வீடொன்றில் நடத்தப்பட்டு வந்துள்ளது.

இச்சூதாட்ட நிலையத்தை சுற்றிவளைத்த பொலிஸார் 8 பெண்களையும் ஆண் ஒருவரையும் கைது செய்துள்ளனர். அளுத்கம, 06

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம், கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஹர்ஷ கூறியுள்ள கருத்து சரியானது

சர்வதேச நாணய நிதியம் மூன்றாவது தவணைக் கடனை இலங்கைக்கு வழங்குவதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர்களுடனான கலந்துரையாடலில் பங்கேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும், எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவர்களிடமிருந்து இந்த அழைப்புகளுக்கு சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த நாடு எதிர்கொண்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு I.M.F

வரைபட விபரம் 2.4
2022 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரையிலான வெளிநாட்டு நிதி இடைவெளி மற்றும் திட்ட நிதி

அமெரிக்க டொலர் மில்லியன்

	2022	2023	2024	2025	2026	2027	மொத்தம் 2022–27
நிதி இடைவெளி (அ)	2.834	4.939	4843	5.018	3.608	3.911	25.153
திட்ட நிதி (ஆ)	2.834	4.939	4.843	5.018	3.608	3.911	25.153
ச.நா. நிதியத்தின் யின் விரிவான கடன் வசதிகள்	0	663	665	663	662	329	2982
சர்வதேச நாணய நிதியத்தின் வரவு செலவு கோட்பாடு	0	900	850	700	700	600	3.750
உலக வங்கி	–	250	400	400	400	300	1.750
ஆசிய அபிவிருத்தி வங்கி	–	650	450	300	300	300	2.000
வேறு	–	0	0	0	0	0	0
நிலுவையில் உள்ள கடன் வெளிநாட்டு கடனில் நிரந்தரமாக தொடர்ந்த கடன்	2.834	–	–	–	–	–	2.834
கடன் சலுகை	–	3.376	3.328	3.655	2.246	1.482	14.167
இறையாண்மை பிணைமுறி பத்திர சந்தை அணுகல்	–	0	0	0	0	1.500	1.500
பற்றாக்குறை	0	0	0				
மொத்த சர்வதேச கையிருப்பு	1.898	4.431	6.128	8.520	10.888	14.208	
திட்ட கடன்	1.473	1.400	1.542	1.585	1.633	1.628	

நிதி சர்வதேச நாணய நிதியத்தின் (2023) இலங்கை விரிவாக்கப்பட்ட கடன் வசதியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டத்திற்கான கோரிக்கை.
ஊடக அறிக்க, பணியாளர் சபை அறிக்கை மற்றும் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை

தவிர்ந்த வேறு எந்த முறையான மாற்றையும் அவர்கள் குறிப்பிடவில்லை.

அது தொடர்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கட்டுரையே இதுவாகும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை வரலாற்றில் சந்தித்த மோசமான பொருளாதார அவலத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஒரு வருடமாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, அதன் பலனாக மார்ச் 2023 இன் இறுதியில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு விரிவான கடன் ஒப்பந்தத்தில் நாடு நுழைந்தது. இந்தக் கடன் ஒப்பந்தத்தின்படி, பல முன்னிபந்தனைகள் மற்றும் கள நிபந்தனைகளை நிறைவேற்றி, அதன் முடிவுகளை உலகுக்குக் காட்டிய பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணையைப் பெற முடிந்தது.

இரண்டாவது தவணையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், மூன்றாவது தவணையைப் பெறுவதற்கான வாய்ப்புக்காக, தேசிய கொள்கை மற்றும் நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சியின் பொறுப்புக் கூறக் கூடிய கட்சித் தலைவர்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார்.

மாற்று பரிந்துரைகள்:

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சியை சார்ந்தவர்கள் இந்த ஒப்பந்தத்தின் பகுதிகளை தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளும் திறன் தங்களிடம் இருப்பதாக அவர்கள் பகிரங்கமாக அறிவிப்பதாலேயே அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

எனவே, நிதியத்தின் தலைவர்கள் முன்பாக மாற்றுத் திட்டங்களை முன்வைப்பதற்கான பொன்னான சந்தர்ப்பம் தற்போது உருவாகியுள்ளது. அந்த விவாதங்களுக்குப் பங்களிப்பது நாட்டுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தலைவர்களின் கடமையாகும்.

கையொப்பமிடப்பட்ட IMF நீட்டிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், கடன் நிலைத்தன்மையை அடைவதற்கு நாற்பத்தெட்டு மாத திட்டத்துடன் இலங்கையில் நிதி ஒருங்கிணைப்பு செயல்முறையை முகாமைத்துவம் செய்வதாகும். அரச வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்க இது பயன்படுத்தப்படும்.

இருப்பினும், மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பில் பங்களிப்பதன் மூலம் கொடுப்பனவுகளை ஆதரிக்கவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கைக்கு இணங்க, அரச வரவு செலவுத் திட்டம், கடன் நிலைத்தன்மையை அடைய முதன்மைக் கணக்கில் நிலுவையை தொடர்ந்து பராமரிக்க வேண்டும். அதாவது வட்டிக் கொடுப்பனவுகள் தவிர்த்து அரசாங்கத்தின் அன்றாடச் செலவுகளை ஈடுசெய்யும் அளவுக்கு இலங்கை அரசாங்கம் போதுமான வருமானத்தை ஈட்ட வேண்டும். அதன்படி, மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை மொத்த உற்பத்தியின் சதவீதமாக ஐந்து சதவீதம் அல்லது அதற்கும் குறைவாகப் பராமரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2032 ஆம் ஆண்டிற்குள், மொத்த நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த வெளிநாட்டுக் கடனில் தொண்ணூற்றைந்து சதவீதமாகவோ அல்லது அதனிலும் குறைவாகவோ குறைக்க வேண்டும்.

2022 முதல் 2027 வரையிலான மத்திய அரசின் ஆண்டு மொத்த நிதித் தேவை சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13% ஆக இருக்க வேண்டும். 2027 முதல் 2032 வரை அரசின் வெளிநாட்டுக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5% ஆக இருக்க வேண்டும். இந்த இலக்குகளை அடைவதன் மூலம் 2028 ஆம் ஆண்டிலிருந்து செலுத்துவதற்கு வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த மறுசீரமைப்புத் திட்டங்களின்படி, இறுகியுள்ள வெளிநாட்டுக் கடன் பங்குகளில் இருந்து அடுத்த ஐந்து முதல் ஆறு ஆண்டுகளில் 37% கடன் பங்கு செலுத்தப்பட வேண்டும். 06 முதல் 20 ஆண்டுகளுக்குள் கடன் தொகையில் ஐம்பத்தொரு சதவீதம் செலுத்த வேண்டும்.

மீதமுள்ள 12% கடன் தொகையை 20 ஆண்டுகளுக்குப் பிறகு செலுத்த வேண்டும். அதற்கு 2050 வரை அவகாசம் உள்ளது. இந்தக் கடன் தொகையை செலுத்த வேண்டும் ஆனால் செலுத்தப்படாமல் இறுகியுள்ள கடனை உலக சமூகத்தின் உதவியுடன் செலுத்த வேண்டும். ஒரு நாட்டின் ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ கடனை செலுத்தாமல் முரடர்களைப் போல நடந்து கொள்ள முடியாது. முன்னர் மேற்கொள்ளப்பட்ட கடன் ஒப்பந்தங்கள் கடனை செலுத்தாததால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இதில் அடங்கும். மறுசீரமைப்பு செய்யாமல், கடனை அடைக்க சர்வதேச ஒப்பந்தங்களைச் செய்யாமல், நாடு முன்னேற முடியாது. சர்வதேச உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே இந்த நிலைமையை சமாளிக்க முடியும்.

கொடுப்பனவுகளின் இருப்பு நெருக்கடி:

இந்த அவதானம் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பு குறித்து விடயங்களை அறிந்த உண்மையான நிபுணரான நிதிக் குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, "இந்த நிலைமை அரசியல் பிரச்சினையல்ல, நாட்டின் பிரச்சினை" என்று கூறுகிறார்.

"தொழில்நுட்ப உண்மைகளின்படி உலகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவியல் முறைகள் மூலம் அந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட வேண்டும். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் இந்த ஆழமான பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி எந்தப் புரிதலும் இல்லை. அவர்கள் கலரியை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், கலரியை மகிழ்ச்சிப்படுத்தி ஒரு நாட்டில் ஆட்சி செய்ய முடியாது. ஏனெனில் வெளிநாட்டுக் கடன் நிலையானதாக இல்லை என்றால், I.M.F ஒப்புதல் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, கொடுப்பனவுகளின் வெளிநாட்டு இருப்புக்கள் சரிந்தால், சர்வதேசம் நாட்டிற்கு கடன் பத்திரங்களை வழங்குவதை நிறுத்தலாம். அப்போது எரிவாயு, எரிபொருள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறையாகி, போக்குவரத்து முதல் அனைத்தும் தடைப்படும்.

இத்தகைய வெளிப்புற அதிர்ச்சிகளைத் தாங்க முடியாது. ஒரு தீவு நாடாக நாம் எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியை ஆழமான யதார்த்தத்தை அறிவார்ந்த மற்றும் தொலைநோக்கு புரிதல் மூலம் மட்டுமே சமாளிக்க முடியும்.

2022 முதல் 2027 வரையிலான வெளிநாட்டு நிதி இடைவெளியின் அட்டவணை இந்தக் கட்டுரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அட்டவணையைப் படித்த பிறகு நிலைமை என்ன? தீர்வுகள் என்ன என்பது பற்றிய விடய புரிதல் சாத்தியமாகும்.

2022 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த முறையை மாற்றுவார்களா என்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவோ அல்லது ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களோ தெளிவான அறிக்கையை நாட்டுக்கு வழங்க வேண்டும். அப்படி ஒரு தெளிவான அறிக்கையை வெளியிடாமல், கலரியை மகிழ்விப்பதால் மாத்திரம் நாட்டின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற முடியாது.

தற்போது செயல்படும் திட்டத்திற்கு வெளியே ஒரு அரசாங்கம் ஒருபோதும் ஆட்சி செய்ய முடியாது.

அவ்வாறு செய்யாமல் யதார்த்தத்திற்கு புறம்பாக செயற்பட முற்படுவது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகரிக்கச் செய்யும். யார் ஆட்சி செய்தாலும் வரலாற்றில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை தீர்க்க ஒரே ஒரு வழிதான் உள்ளது. ஒரே திட்டம் தான் உள்ளது. எனவே நெருக்கடியை சமாளிக்க என்ன மாதிரியான வேலைத்திட்டம் உள்ளது என்பதை எதிர்க்கட்சித் தலைவரும் அணியும் விளக்க வேண்டும்.

ஆனால், ஒரு நாடாக நாம் இந்தக் கடன்களை உரிய காலத்தில் செலுத்த வேண்டும். இந்த நிலைமை குறித்து நீண்ட விவாதத்திற்குப் பிறகு, அரசாங்கம் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. அதன் பின்னர் நாம் எதிர்கொள்ளும் பெரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முறைகளை முறையாக உருவாக்கியது. இன்றைக்கு கஷ்டமாக இருந்தாலும், எமக்கு இந்த பாதையில் செல்லாமல் வேறு எந்தப் பாதையில் சென்றாலும் பொருளாதார நெருக்கடியிலிருந்தும், சிக்கியுள்ள வெளிநாட்டுக் கடன் நெருக்கடியிலிருந்தும் விடுபட முடியாது.

உதித்த குணவர்தன
(தமிழில்: வீ. ஆர். வயலட்)

உலக வாய் சுகாதார தினத்தினை முன்னிட்டு கல்முனையில் மாபெரும் பற்சிகிச்சை முகாம்

உலக வாய் சுகாதார தினத்தினை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த மாபெரும் பற்சிகிச்சை முகாம் அண்மையில் பெரியநீலாவணை கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் கிழக்கு மாகாண கிளையின் ஒருங்கிணைப்பில் மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல் எனும் தொனிப்பொருளில் பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.சரூக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், இலங்கை பல் மருத்துவர் சங்கத்தின் கிழக்கு மாகாண கிளைத்தலைவர் டொக்டர் ரீ.கேதீசன், செயலாளர் டொக்டர் எஸ்.லிவிட்டன் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள், பல் மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண பல் மருத்துவ சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலினை தொடர்ந்து இடம்பெற்ற பற்சிகிச்சை மருத்துவ முகாமில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பெருமலவிலானோர் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். அதனைத் தொடர்ந்து வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றும் இடம்பெற்றது.

குறித்த கருத்தரங்கில் முன்பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர். இலங்கை பல் மருத்துவர் சங்கத்தின் கிழக்கு மாகாண கிளைத்தலைவர் டொக்டர் ரீ.கேதீசன், பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.சரூக், டொக்டர் ஹபீல் ஆகியோர் வாய் சுகாதாரம் தொடர்பாக விரிவுரையாற்றினர்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 20 ஆம் திகதி உலக வாய் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு அதற்கு முன்னுள்ள மாதத்தினையும் பின்னுள்ள மாதத்தினையும் தேசிய வாய் சுகாதார விழிப்புணர்வு மாதங்களாக பிரகடனப்படுத்தி பல்வேறு வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இம்முறை கல்முனை பிரதேசத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஏ.எல்.றியாஸ்
(பாலமுனை விசேட நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 11 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	05.04
லுஹர்	12.22
அஸர்	03.38
மஃரிப்	06.22
இஷா	07.32

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் மாசி 28

ராகுகாலம் : காலை : 7.52 - 9.22வரை
சுபநேரம் : பகல் : 12.22 - 1.52வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

எதிர்கால சந்ததிக்காக இந்து சமுத்திரத்தை உறுதி செய்தல் கொழும்பில் நேற்று 'IORA' பாரிய கண்காட்சி

'எதிர்கால சந்ததியினருக்கான நிலையான இந்து சமுத்திரத்தை உறுதி செய்தல்' எனும் தொனிப்பொருளில் நேற்று (10) கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற 'IORA' தினக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்து கொண்டார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியம் எனப்படும் IORA சங்கம்1997 இல் நிறுவப்பட்டது.இந்த வகையில், இவ்வமைப்பின் 27 வது வருட நிறைவு இவ்வருடம் கொண்டாடப்படுகிறது.சதுப்புநில சுற்றுச்சூழலை மீளமைப்பதற்கான முன்முயற்சிகளுக்காக கடந்த மாதம் ஐக்கிய நாடுகளின் முக்கிய மறுசீரமைப்பு விருது இலங்கைக்கு வழங்கப்பட்டது.

இதன்படி, சமுத்திர பாதுகாப்பு மற்றும் அதன் நிலையான அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் முன்னணி நாடாக இலங்கை மாறியுள்ளது. இத்ருணத்தில், 2024 ஆம் ஆண்டிற்கான 'IORA' தினத்தை இலங்கையில் நடத்துவது விசேட அம்சமாகும்.

பல்வேறு செயற்பாடுகளுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதலுடன் இந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது. பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவர்களுடன் ஜனாதிபதி சிநேகபூர்வமாக உரையாடியதுடன் அமைப்பின் உறுப்பு நாடுகளின் தூதரகங்களினாலும் எமது நாட்டு அரசு நிறுவனங்களினாலும் நிறுவப்பட்ட கண்காட்சி கூடங்களையும் பார்வையிட்டார்.

06

தவக்கால சிந்தனை

இறையருளின் முக்கியத்துவம்

தவக்காலமானது பெரும்பாலானவர்கள் வளர்த்தெடுக்கப்பட்ட ஆலயத்திற்கு திரும்பி வருகிற காலமாகும். அவ்வாறே தவக்காலம் நம்பிக்கையை இழந்து தவிக்கின்ற பலரும் தங்களது நம்பிக்கையை மீளவும் தேடுகின்ற காலமுமாகும்.

இன்றைய நற்செய்தியானது, நாம் இத்தவக்காலமதில் நம்மோடு இணைந்துகொள்ள யாரை அழைக்க வேண்டுமென கற்பிக்கின்றது. யோவான் நற்செய்தியாளர் தமது நற்செய்தியினை எழுதும் தருணமதில் அநேகமான சமாரியர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவி விட்டார்கள். ஏன் சமாரியர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிய முதல் யூதரல்லாத குழவினர் என்பதனை திருத்தூதர் பணி நூல் தெளிவாக்குகின்றது.

சமாரியர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பு தாவீது மன்னன் யூத சமயத்தில் அறிமுகப்படுத்திய மாற்றங்களை ஏற்காது, பண்டைய யூத சமயத்தை கடைப்பிடித்தவர்களாவர். ஆயினும் அவர்களில் பெரும்பாலானவர்களில் இறையருள் காணப்பட்டது. இயேசுவைப் பின்பற்ற இறையருள் அவர்களில் திறக்கப்பட்டது.

இத்தவக்காலமதில் நம்மோடு திருஅவையில் இணைந்து கொள்ள அழைப்பு விடுக்கத் தீர்மானிக்கின்ற போது, அருள் முதன்மையானதாகத் திகழ்கிறது. கடவுளின் அருள் தங்களில் பல்வேறு வடிவங்களில் செயலாற்றுகின்றது என்பதற்கு மக்கள் பல சாட்சியங்களை தருவார்கள். 'திருப்பலியின்போது என்ன நடைபெறுகிறது" அல்லது குருவானவர் எதைத் குறித்து மறையுரையாற்றுகிறார்' போன்ற கேள்விகளை பங்கு குறித்து அவர்கள் எழுப்பலாம். திருஅவை குறித்த இத்தகைய ஆர்வமானது கடவுளின் அருளின் அடையாளமாகும்.

இன்றைய நற்செய்தியின் பாடம் யாதெனில் கடவுள் அருளின் முக்கியத்துவமாகும். அவ்வருள் சமாரியரிடம் காணப்பட்டது, அதனை புனித யோவான் சமாரியரை சந்தித்ததை வைத்து நினைவு கூர்கிறார் (திருபணி. 8:14). உமது அயலவர்கள், நண்பர்கள், உடன் பணியாளர்கள் மத்தியிலும் அது காணப்படலாம். அவர்கள் உமது பங்குத் திருஅவை குறித்து ஆர்வமாக இருந்தால் அவர்களை இத் தவக்காலமதில் அழையுங்கள். அவ்வாறே, பல்வேறுபட்ட காரணங்களால் இன்னும் இந்த அழைப்பு ஏற்க முடியாதவர்களுக்கு கால அவகாசம் கொடுங்கள்.

இன்றைய நற்செய்தி மட்டில் இறைவேண்டல் புரிந்து, இறையருளால் கடவுளின் அருளின் முகவராக செயற்பட உங்களையே விட்டுக்கொடுங்கள்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

நாவலப்பிட்டி கடயல்லன போஹில் பாலம் புனரமைப்பு

நாவலப்பிட்டி பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அளுத்கமகே முற்றாக சேதமடைந்திருந்த நாவலப்பிட்டி கடயல்லன போஹில் பாலத்தை புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். ஜனாதிபதி இப்பாலத்தை புனரமைக்கவென 450 இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தார்.புனரமைக்கப்பட்ட இப்பாலத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன திறந்து வைப்பதைக் காணலாம்.

எமது கோரிக்கைகளை நிறைவேற்றி போட்டியிடுபவரை இ.தொ.கா ஆதரிக்கும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகள் நம்பிக்கையளிக்கிறது

ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடமே முடிவெடுக்கும் என,அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வில் நேற்று (10) பங்கேற்று உரையாற்றிய போதே,அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.இங்கு பேசிய அவர்:

எமது தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்க முடியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதல் விடயம் மலையகத்தில் வீட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். அந்தவகையில் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய சூழ்நிலையை ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார்.

இரண்டாவது மலையக பெருந்தோட்டத்தொழிலாளர்களின்சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்று அவசியம். தற்போது சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்துவருகிறார். இது தற்காலிக தீர்வு மாத்திரமே. எனவே, நிரந்தர தீர்வு என்னவென்பதை ஜனாதிபதி முன்வைக்க வேண்டும்.

இறுதியாக காணி உரிமை விடயமாகும். இதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி நாலாயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். காணி உரித்தும் வழங்கப்பட வேண்டும்.

இவற்றை செய்து, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவரை நாம் ஆதரிப்போம்.

கோரிக்கைகளை விடுத்துக்கொண்டும், ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுக்கொண்டும், அறிக்கைகளை விடுத்துக்கொண்டும் நாம் அரசியல் நடத்துவதில்லை. சொல்லுக்கு செயல் வடிவம் கொடுத்து வருகிறோம்.

அதேவேளை, இலங்கையில் மகளிருக்கான ஒதுக்கீடு தொடர்பில் சட்டம் இயற்றுவதற்கு முன்பிருந்தே

பெண்களுக்கு இ.தொ.கா முக்கியத்துவம் வழங்கிவருகிறது. பெண்களுக்கு உயர் பதவிகள்கூட வழங்கப்பட்டுள்ளன. எனவே, பெண்களை மதித்து, அவர்களின் கோரிக்கைளை நிறைவேற்றி, அவர்களால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளும் ஏற்கப்பட்டே முடிவுகள் எடுக்கப்படும்.

எமது பெருந்தோட்டத்தொழில்துறையில் ஈடுபடும் தாய்மார் , சகோதரிகளின் தொழில்சார் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நீர் விநியோகத்தில் தடங்கலை எதிர்நோக்க வேண்டிய நிலை

நிலவும் வரட்சியான காலநிலையால், நீர் விநியோகத்தில் தடைகளை எதிர்நோக்கியுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. தினசரி தண்ணீர் தேவை அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்றும் சபை கூறியுள்ளது.

தேசிய நீர் வழங்கல் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அனோஜா களுஆராச்சி இதுபற்றி குறிப்பிட்டதாவது, சில பிரதேசங்களுக்கு குறைந்த அழுத்தத்தின் கீழ் நீர் வழங்குவதற்கு அல்லது விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது.இது தொடர்பாக முறைப்பாடுகளைத் தெரிவிக்க 1939 என்ற தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, அம்பத்தலே மற்றும் பியகம நீரேற்று நிலையங்களுக்குள் உப்பு உட்புகுவதைத் தடுப்பதற்காக, அமைக்கப்பட்ட தற்காலிக உப்புத் தடுப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மிளகு, இஞ்சி, மஞ்சள் இறக்குமதிக்கு அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள சில பொருட்களுக்கான இறக்குமதியை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மீள் ஏற்றுமதிக்காக மிளகு, இஞ்சி, மஞ்சள் உள்ளிட்ட மசாலா பொருட்களை இறக்குமதி செய்வதற்கே அனுமதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு இணங்கவே, இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகளின் கீழ், அது தொடர்பான இறக்குமதி உரிமையை வழங்க அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அந்த தீர்மானத்திற்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க மீள் ஏற்றுமதிக்காக மிளகு, ஜாதிக்காய், ஏலக்காய், இஞ்சி, மஞ்சள் மற்றும் ஏனைய மசாலாப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படவுள்ளது.

அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு உள்நாட்டில் குறைந்தபட்ச மதிப்பான 35 சதவீத பெறுமதி சேர்த்த பின்னர், மீள் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், இந்த பொருட்களை இறக்குமதி செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டது.

இதற்கமைய கடந்த வருடம் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கிணங்க தெரிவு செய்யப்பட்ட மசாலாப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் மீள் ஏற்றுமதி செய்வதற்கும் நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

ஆதி சிவன் கோவிலில் பொலிஸார் நடந்து கொண்டமை பாரிய அராஜகம்

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல்கள் கசலதும் அடாவடித்தனம் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,இன நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையில் பொலிஸாரின் இச்செயற்பாடுகள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

பளைப் பகுதியில் எரிபொருள் நிலைய திறப்புவிழா நிகழ்வு நேற்றுகாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் இவ்விடயம் தொடர்பில் கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சிவராத்திரிதினம் என்பது இந்துக்களின் முக்கிய சமயம் சார் நிகழ்வாகும். இதனை முன்னிட்டு குறித்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அடியவர்கள் சென்றபோது பொலிஸார்

தடுத்து நிறுத்தி அடாவடித்தனம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நீதிமன்றத்தின் அனுமதியுடன்தான், பக்கதர்கள் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவிலுக்குச் சென்றுள்ளனர். இந்நிலையில்,அங்கு சென்ற பொலிஸார் பக்தர்களையும் வழிபாடுகளையும் அவமானப்படுத்தும் வகையில் நடந்துள்ளனர். இதை,அடாவடித்தனம் என்றே கருத வேண்டும். ஆலய தரிசனம் செய்வது அவரவர் உரிமையாகும். இதைத் தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது.

06

ஊடகவியலாளர் ரிபாஸின் தந்தையார் காலமானார்

தினகரன் பத்திரிகையின் பிரதேச ஊடகவியலாளராக நீண்டகாலமாக கடமையாற்றிவரும் எம்.எப்.ரிபாஸின் தந்தையாரான ஈஸாலெப்பை முஸ்தபா அவர்கள் நேற்று அட்டாளைச்சேனையில் காலமானார். மூன்று பிள்ளைகளின் தந்தையாரான இவர்,நீண்ட காலமாக நோய்வாய்பட்டிருந்த நிலையில் தனது 66 ஆவது வயதில் காலமானார். மூத்த புதல்வரான எம்.எப்.ரிபாஸ் பாலமுனை தினகரன் நிருபராக பணியாற்றி வருகிறார். மர்ஹூம் ஈஸாலெப்பை முஸ்தபாவின் ஜனாஸா நேற்று (10) இஷாத்தொழுகையின் பின்னர் அட்டாளைச்சேனை ஆறாம்பிரிவு முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இணையத்தளங்களுக்கு அடிமையான சிறுவர்களை ஒரே நாளில் மீட்க முடியாது

கையடக்க தொலைபேசியின் ஊடாக இணையத் தளங்களுக்கு அடிமையான சிறுவர்களை ஒரே நாளில் மீட்பது சாத்தியமில்லை என, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குழந்தைகளை வேறு பணிகளுக்கு வழிநடத்துவதன் மூலம், அவர்கள் கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தளத்திற்கு திரும்புவதைத் தடுக்க முடியும் எனவும் அதன் தலைவர் தெரிவித்தார்.

கனடாவில், வீடொன்றில் வைத்து ஆறு இலங்கையர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன், சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் மீண்டும் விவாதம் எழுந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எல்லை தாண்டி மீன்பிடித்த 22 இந்திய மீனவர்கள் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில், 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் மீன்பிடி படகுகளையும் கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் கைதாகினர்.

கைது செய்யப்பட்டுள்ள மேற்படி இந்திய மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் இவர்கள் முற்படுத்தப்படவுள்ளனர்.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் மாசி மாதம் 28ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 29

குறள் தரும் சிந்தனை

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்

செய்யக்கூடிய செயல்கள் எவை ஆயினும், அவை எல்லா இடங்களிலும் தொய்வில்லாத அறவழியிலேயே செய்யப்பட வேண்டும்.

எதிரணியினருக்கு ஜனாதிபதி வழங்கியுள்ள சந்தர்ப்பம்

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியின் கட்சித் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று 11 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கலந்துரையாடலில் பங்கேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திசாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆகியோருக்கு ஜனாதிபதியினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இக்கலந்துரையாடலில் மேற்படி பிரதிநிதிகளுடன் பங்கேற்பதற்கு வேறு பிரதிநிதிகள் எவராவது விரும்பினால், அவர்களுக்கும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்ட நாட்டை மீளக்கட்டியெழுப்ப வேண்டுமானால் சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கிக் கொண்ட திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனைத்துக் கட்சிகளின் கூட்டுப் பொறுப்பு மிக அவசியமென்பதே ஜனாதிபதியின் உறுதியான நிலைப்பாடு ஆகும். எனவேதான் இன்றைய கலந்துரையாடலில் பங்கேற்குமாறு எதிரணியின் தலைவர்களுக்கு ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தீவிரமடைந்திருந்த பொருளாதார நெருக்கடி படிப்படியாக முடிவுக்கு வந்துவிடுமென்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட வெற்றிகரமான திட்டங்கள் காரணமாகவே நாடு படிப்படியாக பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்து வருகின்றது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்குமென்பதற்கான நம்பிக்கைகளில் ஒன்றுதான் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கின்ற நிதியுதவிகள் ஆகும். இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் உடன்பட்டிருந்தமை எமது நாட்டின் மிகப்பெரும் வெற்றியாகும். சர்வதேச நாணயத்தின் உதவி ஊடாக இலங்கைக்கு மேலும் பல உதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு முன்னதாக இலங்கையின் முன்னைய கடன் வழங்குனர்கள் அனைவரையும் கடன் மறுசீரமைப்புக்கு இணங்கச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை முன்வைக்கப்பட்டமை நினைவிருக்கலாம். இந்நிபந்தனையை வெற்றி கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவரது தலைமையிலான அரசாங்கமும் மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகள்தான் அன்றைய வெற்றிக்கு அடிப்படையாகும்.

இலங்கை வங்குரோத்து நிலைமைக்குச் சென்று விட்டதாக சர்வதேசமே கணித்துவிட்ட பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்காக அரசாங்கம் தொடர்ந்து போராடி வந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றி காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 48 மாதங்களில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியாக இலங்கைக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அது மாத்திரமன்றி சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான நிதியை இலங்கை கோருவதற்கான வாய்ப்பும் கிடைத்தது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கின்ற உதவிகள் தொடர்பில் எதிரணியினர் பிரதிகூலமான விமர்சனங்களையே தெரிவித்து வந்தனர். சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்குக் கிடைப்பது பகல் கனவு என்றெல்லாம் எதிரணியினர் கூறி வந்தனர். அவர்களின் விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்திலேயே சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்குக் கிடைத்தது. அதேசமயம், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டிருந்த உறுதியான நிலைப்பாடும் அவர் மேற்கொண்ட முயற்சிகளும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

இந்நிலையிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் இன்று கலந்துரையாடல் நடைபெறுகின்றது. நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல் ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி மைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.

இக்கலந்துரையாடலில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தின் நிதிக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

editor.tkn@lakehouse.lk

கிழக்கு இளைஞர்கள் அமைப்பு ஏற்பாட்டில் காரைதீவில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

ஆளுமைப் பெண்கள் விருது வழங்கி கௌரவிப்பு

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கிழக்கு இளைஞர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினம்_2024 நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (09) அமைப்பின் தலைவர் தாணிஸ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் காரைதீவு பிரதேசத்தில் நடைபெற்றது.

கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

கல்வி அபிவிருத்தி அமைப்பின் தலைவரான றிஸ்லி முஸ்தபா, காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா பஷீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா அலிப் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், Eastern SOCIO அபிவிருத்தி அமைப்பின் தலைவி வாஹுதா முகைதீன் இம்தியாஸ் காரியப்பர், கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஆலோசகரும் அதிபருமான றிப்கா அன்சார், திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்ஜவாஹிர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.றிஸ்வானுல் ஜன்னாஹ் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் மகளிர் பிரிவினால் 'அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்' எனும் தலைப்பிலான சர்வதேச மகளிர் தின நினைவு மலர் ஒன்றும் இதன்போது வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்வேறு துறைகளிலும் திறமைகளை வெளிப்படுத்தி தங்களுக்கும் கிழக்கு மண்ணுக்கும் பெருமை சேர்த்த பெண்கள் பலரும் 'ஆளுமைப் பெண்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் குறித்த மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்ட சகல அதிதிகளும் கிழக்கு இளைஞர்கள் அமைப்பினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏ.எல். றியாஸ்...✍
(பாலமுனை விசேட நிருபர்)

மருதமுனை சுனாமி வீடமைப்புத் திட்டம்; வறிய மக்களிடமிருந்து வேண்டுகோள்கள்!

கல்முனை பிரதேசத்திலுள்ள மருதமுனையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் தொடர்பாக இப்பிரதேச மக்கள் பலர் நீண்ட காலமாக புகார் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 2004 சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் மற்றும் வறிய மக்களுக்கு வழங்குவதற்காகவும் 168 வீடுகளும் இதர தேவைகளுக்காக 10 வீடுகளுமாக மொத்தம் 178 வீடுகள் அரசினால் நிர்மாணிக்கப்பட்டு முதற்கட்டமாக 108 வீடுகள் கையளிக்கப்பட்டன. பின்னர் எஞ்சிய வீடுகளையும் மக்களுக்காக வழங்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கமைவாக வீடுகளற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இருப்பினும் தேவையுடையவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டதால் மருதமுனை ஜம்இய்யதுல் உலமாவிற்கு பயனாளிகளைத் தெரிவு செய்யும் பொறுப்பு கையளிக்கப்பட்டு, பயனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டு மருதமுனையின் பள்ளிவாசல்களில் அவ்விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இருப்பினும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் புதியதோர் பெயர்ப்பட்டியலை கல்முனை பிரதேச செயலகம் வெளியிட்டுள்ளது. மருதமுனை மேட்டுவட்டைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த 65 மீற்றர் வீட்டுத் திட்டத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலில் ஏழைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக வறிய மக்கள் கூறி வருகின்றனர்.

இவ்வீடுகள் வறிய மக்களுக்கு வழங்கப்படவில்லையென்று வீடு கிடைக்காத வறியவர்கள் புகார் கூறுகின்றனர். வீடு பெற்றுத் தருமாறு கோரி விண்ணப்பங்களை செய்த தங்களுக்கு வீடுகள் வழங்கப்படவில்லையென்று வறிய மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு வீடுகள் வழங்கப்பட்டோரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் நியாயமான முறையில் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவர்களுக்கே வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் வறிய மக்கள் கோருகின்றனர். மேற்படி 65 மீற்றர் வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்ட விடயம் குறித்த செய்திகள் கடந்த காலத்தில் சமூகவலைத்தளங்களிலும் பரபரப்பாக இடம்பெற்றிருந்தன. இது தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இவ்வீடுகள் வழங்கப்பட் விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று இப்பிரதேச மக்கள் தொடர்ச்சியாகக் குரலெழுப்பி வருகின்றனர்.

மொஹமட் ஜஸீல்...✍
(அம்பாறை நிருபர்)

உலக முஸ்லிம்களைப் பெருமைப்படுத்தும் சவுதி அரேபியாவின் தேசியக்கொடி தினம்

சவுதி அரேபியாவின் தேசியக்கொடி தினம் (11.3.2024) இன்றாகும். உலகில் இருநூறுக்கும் மேற்பட்ட நாடுகள் உள்ளன. அவற்றில் 193 நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு நாடும் தமக்கென தனித்துவமான தேசியக் கொடியைக் கொண்டிருக்கின்றன. அனைத்து நாடுகளதும் தேசியக் கொடிகள் ஐ.நா. தலைமையகத்தில் பறக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பறக்க விடப்பட்டிருக்கும் கொடிகளில் 'லாஇலாஹ இல்லல்லாஹ முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்ற ஏகத்துவ திருக்கலிமாவை சவுதி அரேபியாவின் தேசியக்கொடி கொண்டிருக்கிறது. இவ்வாறான தேசியக் டியை சவுதி அரேபியா பிரகடனப்படுத்திய நாள் தேசிய கொடிதினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

சவுதி அரேபியா மாமன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர் ரஹ்மான் ஆல் ஸஊத் தான் இத்தினத்தைப் பிரகடனப்படுத்தினார். திருக்கலிமாவை தங்களுடைய தேசியக் கொடியாக பிரகடனப்படுத்தியது சவுதி அரேபியாவுக்கு மாத்திரமல்ல, உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் மரியாதையும் பெருமைக்குமுரிய விடயமுமாகும்.

'லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்ற கலிமா குறித்து ஒவ்வொரு முஸ்லிமுக்கும் சிறு வயது முதல் உரிய முறையில் சொல்லிக் கொடுக்கப்பட்டு அதன் பிரகாரம் அவர்களை வாழ வழியமைக்கப்படுகிறது. திருக்கலிமா ஒவ்வொருவரையும் சிறந்த ஒரு புனிதனாக மாற்றுவதற்கு வழிவகுக்கிறது.

இக்கலிமாவின் இரண்டாவது பகுதி லாயிலாஹ இல்லல்லாஹ்வுக்கு பிறகுவரும் 'முஹம்மதுர் ரசூலுல்லாஹ்' என்பதாகும். முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பது நபி (ஸல்) அவர்களை நபியாக, அல்லாஹ்வின் தூதராக ஏற்றுக்கொள்ளும் ஈமானாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் மனதார ஏற்று நபி (ஸல்) அவர்கள் எதை போதித்தார்களோ அப்போதனைகளின் பிரகாரம் வாழ்வதைக் குறிக்கும்.

சவுதி அரேபியாவின் தேசியக்கொடியானது ஒற்றுமையின் சின்னம் ஆகும். இக்கலிமாவின் நிழலில் உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு ஒன்றுபட்டுள்ளனர். ஒருபோதும் மறைக்கப்படாத பெருமையின் அடையாளம் இது. சவுதியின் கொடி சவுதியின் ஒருங்கிணைந்த பகுதியாக கருதப்படுகிறது.

'லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்' என்ற திருக்கலிமா முஸ்லிம்களின் பாரம்பரிய கலிமாவாக இருந்தாலும் இத்திருக்கலிமாவை சவுதி அரேபியா தங்களுடைய தேசியக்கொடியாக பிரகடனப்படுத்தி கலிமாவின் பக்கம் மக்களை அழைத்து அதன் பிரகாரம் மக்களை வாழ வழிவகுத்து அக்கலிமாவை உலக அளவில் மக்களுக்கும் போதித்து கலிமாவுக்கு மிகப்பெரிய ஒரு அந்தஸ்தை பெற்றுக் கொடுத்திருக்கிறது. இதன் பெருமை மன்னர் அப்துல் அஸீஸையே சாரும். சவுதி அரேபியாவின் மூலம் உலக முஸ்லிம்கள் கௌரவிக்கப்பட்ட ஒரு சிறந்த நாளாக விளங்குகிறது இக்கொடி தினம். எனவே இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறு தனித்துவம் மிக்க பணியை மேற்கொண்ட சவுதி அரேபியாவை நாமும் பாராட்டுகிறோம். குறிப்பாக இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் ஸல்மான் ஆல் ஸஊத் ஆகியோருக்கும் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானிக்கும் சவுதி அரேபிய மக்கள் உட்பட இத்திருக்கலிமாவை ஏற்றிருக்கின்ற அனைத்து உலக முஸ்லிம்களுக்கும் எம்முடைய மனம் நிறைந்த பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் இக்கொடி தினத்தில் தெரிவிப்பது பொருத்தமாகும்.

எம்.எச்.ஷேஹுத்தீன்
மதனீ (பி.ஏ), பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம் கொழும்பு

வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 31ஆம்ஆண்டு விழா;

வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட வீர முத்துவேல், நல்லி குப்புசாமி, செந்தில் தொண்டமான்

வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 31 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு 3 பேருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. சென்னை அடையாறு சத்யா ஸ்டுடியோ வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆர் ஜானகி கல்லூரி அரங்கில் வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 31 வது ஆண்டு விழா நடைபெற்றது. இந்த விழாவுக்கு வி.ஜி.பி குழுமத் தலைவரும், வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்க நிறுவனருமான வி.ஜி.சந்தோசம் தலைமை தாங்கினார்.

வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் ரவிதாஸ் வரவேற்புரையாற்றினார். தமிழுக்கும் கர்நாடக இசை நாடகத்திற்கும் சிறந்த தொண்டு ஆற்றி வரும் நல்லி குப்புசாமி செட்டி, சந்திராயன் 3 திட்ட இயக்குனர் வீர முத்துவேல், இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகிய 3 பேருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

இதற்கு முன்னதாக வி.ஜி.பி உலகத் தமிழ் சங்கத்தில் 31 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு முதலமைச்சர் ஸ்டாலின் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய வி.ஜி. சந்தோசம் உரையாற்றுகையில், "வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கம் கடந்த 31 ஆண்டுகளாக பல்வேறு தமிழ்த் தொண்டு ஆற்றி வருகிறது. குறிப்பாக, தமிழ்நாடு மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் 160 இற்கும் மேற்பட்ட திருவள்ளுவர் சிலைகளை நிறுவி சாதனை படைத்துள்ளது. இந்த ஆண்டு விழாவில் சந்திரயான் 3 திட்ட இயக்குனர் வீரமுத்துவேல், 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்கு தொண்டாற்றி வரும் நல்லி குப்புசாமி செட்டி, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியதை பெருமையாக கருதுகிறோம்" என்றார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற சந்திராயன் 3 திட்ட இயக்குனர் வீரமுத்துவேல் ஏற்புரையில், "சந்திராயன் 3 வெற்றிகரமாக ஏவப்பட்டதற்காக வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் எனக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியதை பெருமையாகக் கருதுகிறேன். இந்த விருதை சந்திராயன் திட்ட த்தில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன்" என்றார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற நல்லி குப்புசாமி பேசுகையில் "வி.ஜி.பி குழுமம் தமிழ் நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் நல்ல பெயரைப் பெற்றுள்ளது. வி. ஜி. பி என்றால் 'வெரி குட் பீப்பிள்' என்று முன்னான் அமைச்சர் ராஜாராம் குறிப்பிட்டுள்ளார். இதுவரை இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளில் 160 திருவள்ளுவர் சிலைகளை நிறுவி வி.ஜி.பி உலக தமிழ்ச் சங்கம் பெரும் பெயர் பெற்றுள்ளது" எனக் குறிப்பிட்டார். வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பேசுகையில், "வி.ஜி சந்தோசம் அவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் புகழ்பெற்றவர். அவர் திருவள்ளுவர் சிலைகளை நிறுவுவதன் மூலம் தமிழர்களின் தூதுவராக உலகம் முழுக்க வலம் வந்து கொண்டுள்ளார். தொழிலுக்கு செலவிடும் நேரத்தை தமிழுக்கு செலவிடும் தொழிலதிபர்கள் வேறு யாரும் இல்லை. அவர் இலங்கை வந்தால் 'இந்த யுகத்தின் திருவள்ளுவர்' என்ற பட்டத்தை அவருக்கு வழங்க நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்" என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மல்லை தமிழ் சங்கத் தலைவர் மல்லை சத்யா, சாய்ராம் குழுமங்களின் தலைவர் சாய் பிரகாஷ், தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் அவ்வை அருள், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி வள்ளிநாயகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தொழிலதிபர் ஆர்.வி.எம்.ஏ. ராஜன், திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், தமிழ் வர்த்தக சபையின் தலைவர் சோழநாச்சியார் ராஜசேகரன், துபாய் முகம்மது மொஹதீன், பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் வி.ஜி.பி ரவிதாஸ், செயலாளர் வி.ஜி.பி ராஜாதாஸ் மற்றும் ஏராளமான தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர்.

மானுடவியல்

156

திருநீலகண்டப் பெரும்பாணர் யாழ் வாசித்தபின், பிள்ளையாரை வணங்கிக்கொண்டு பரமசிவன் மேலதாகிய பாணியை விறலியாரோடும் பாடி, யாழ்வாசிக்க; பிள்ளையார் மகிழ்ச்சியடைந்தார். திருநீலகண்டப் பெரும்பாணர் யாழ் வாசித்தபின், பிள்ளையார் அவரைக் கொண்டுபோய், அவருக்கு உறைவிடம் கொடுத்து, விருந்து செய்தார். திரு நீல கண்டப் பெரும்பாணர் சுவாமிமேலே பிள்ளையார் பாடிய திருப்பதிகங்களைக்; கேட்டு, பெருமகிழ்ச்சிகொண்டு, அவைகளின் இசைகளை யாழிலே இட்டு வாசித்தார். பின் பிள்ளையாரை நோக்கி, "சுவாமி! இன்னுந் தேவரீர் அருளிச் செய்யுந் திருப்பதிகங்களின் இசையை அடியேன் யாழிலே இட்டு வாசித்துக் கொண்டு தேவரீரைப் பிரிவின்றிச் சேவிக்கப் பெற வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து தொழுதார். பிள்ளையார் திருவுள மகிழ்ந்து அதற்கிசைந்தருளினார். திருநீலகண்டப் பெரும்பாணர் அற்றைநாட்டொடங்கிப் பிள்ளையார் பாடுந் திருப்பதிகத்தினிசைகளை யாழிலே இட்டு வாசித்துக்கொண்டு என்று மகலாத நட்புடனிருந்தார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் பூமிக்குச் சுமுமுனா நாடியாகிய தில்லையில் விளங்குகின்ற திருச்சிற்றம்பலத்திலே திருநிருத்தஞ் செய்தருளும் சபாநாயகரைத் தரிசனஞ் செய்தற்கு விரும்பித் தந்தையாரோடும் திருநீலகண்டப் பெரும்பாணரோடும் அடியார்கள் பக்கத்திலே சூழ சீர்காழியைக் கடந்து சென்று, சிதம்பரத்தினது திருவெல்லையை அடைந்து நமஸ்கரித்துக் கொண்டு, அந்தத் திருப்பதியைச் சூழ்ந்த திருமதிலினது தெற்கு வாயிலை அடைந்து, தில்லைவாழந்தணர்களும் மற்றை யடியார்களும் மகா அலங்காரத்தோடும் எதிர்கொள்ளப் போய், திருவீதியைத் தொழுது, தூலலிங்கமாகிய கோபுரத்தை நமஸ்கரித்து, எழுந்து உள்ளே புகுந்து, திருமாளிகையை வலஞ்செய்து, பேரம்பலத்தை வணங்கிக் கொண்டு, கனகசபையை அடைந்தார். ஆயிரம் ஆதித்தப்பிரகாசம் கூடிய மண்டலம்போலக் குறைவற நிறைந்த ஞான சபையிலே, திருவருளே திருமேனியாகக் கொண்டு ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாயகரைத் தரிசனம் பண்ணினார்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

காரடையான் நோன்பு

காரடையான் நோன்பு நாளில், விரதமிருந்து புது மஞ்சள் சரடு அணிந்து, வேண்டிக்கொண்டால், கணவரின் ஆயுள் நீடிக்கும்; ஆரோக்கியம் பெருகும். கன்னிப்பெண்களுக்கு, நல்ல கணவர் அமைவது உறுதி.

மாசி மாதம் முடியும் நாளும் பங்குனி மாதம் பிறக்கும் நேரமும் கூடுகிற நன்னாள்... காரடையான் நோன்பு எனும் விரதம் மேற்கொள்ளப்படுகிறது.

கணவனை எமனிடமிருந்து மீட்டெடுத்த சத்தியவான் சாவித்திரி கதை தெரியும்தானே. அவள், பக்தியுடனும் முழு ஈடுபாட்டுடனும் செய்து, கணவனை மீட்டாள். கணவனின் உயிர் காத்தாள். தீர்க்கசுமங்கலி வரம் பெற்றாள். கணவனுக்கு நீண்ட ஆயுள் வரக்காரணமானாள். தாலி நிலைக்கப் பெற்றாள். அவளின் அடியொற்றி காலகாலமாக பெண்கள் இருக்கும் விரதம்தான் 'காரடையான் நோன்பு' எனும் மகத்துவம் மிக்க விரதம்.

'காரடையான் நோன்பு' என்றால் கார அடை செய்வார்கள். ஆனால் கார அடை படையலிடுவதால், காரடையான் நோன்பு எனும் பெயர் அமையவில்லை. கார் என்றால் கருமை. இருள். எமலோகம் எப்படியிருக்கும் என்பதன் குறியீடு. அடையான் என்றால் அடையாதவன். அதாவது எமலோகத்தை அடையாதவன். அப்படி, எமனால் அழைத்துச் செல்லமுடியாதபடி, தங்கள் கணவன்மார்களை காரடையானாக எமலோகத்தை அடையாதவனாக வைத்திருக்க வேண்டி, அம்பாளை, சக்தியைப் பிரார்த்தனை செய்வதுதான், விரதம் மேற்கொள்வதுதான் 'காரடையான் நோன்பு'.

இந்தநாளில், அதிகாலையில் எழுந்து, வீட்டைச் சுத்தம் செய்யவேண்டும். தலைக்குக் குளித்துவிட்டு, பூஜையறையில் கோலமிடவேண்டும். அதேபோல், வீட்டு வாசல், வீட்டின் முக்கியமான வாசல் முதலான இடங்களிலும் கோலமிடவேண்டும். அந்தக் கோலமாகவும் மாக்கோலமாகவும் காவியுடன் கூடிய கோலமாகவும் இருப்பது சிறப்பு.

நிலைவாசலில், மாவிலைத் தோரணங்கள் கட்டவேண்டும். பூஜையறையில் உள்ள சுவாமிப் படங்களுக்கு சந்தனம், குங்குமமிட்டு, பூக்கள் வைத்து அலங்கரிக்க வேண்டும். சுவாமிப் படங்களுக்கு எதிரில், மஞ்சள் சரடு வைத்து, பழங்கள் வைத்துக்கொள்ளுங்கள்.

அன்றைய தினம், கார அடை, வெல்ல அடை படையல் ரொம்பவே மகத்துவம் வாய்ந்தது. காராமணி அடை என்றும் சொல்லுவார். இவற்றை வெண்ணெயுடன் கலந்து நைவேத்தியம் செய்வார்கள். நைவேத்தியம் செய்து, மனதார கணவருக்காக வேண்டிக்கொள்வது ஐதீகம்.

அப்போது, விரலி மஞ்சள் கலந்த மஞ்சள் சரடை கட்டிக்கொள்வார்கள் சுமங்கலிகள். அதேபோல், கன்னிப் பெண்கள், 'நல்ல கணவன் அமையவேண்டும், இனிய வாழ்க்கைத் துணை அமையவேண்டும்' என வேண்டிக்கொண்டு மஞ்சள் சரடை அணிந்துகொண்டு, நமஸ்கரிப்பார்கள்.

'காரடையான் நோன்பு' விரதத்தை மேற்கொண்டு, புது மஞ்சள் சரடு அணிந்து, கணவரிடமும் பெரியவர்களிடமும் நமஸ்கரித்து ஆசி பெறுங்கள். கணவரின் ஆரோக்கியம் பெருகும். ஆயுள் நீடிக்கும். கன்னியருக்கு, நினைத்தபடியான நல்ல வாழ்க்கைத்துணை அமையும் என்பது உறுதி!

களுவாஞ்சிகுடி திருமுருகன் ஆலய வருடாந்த உற்சவம்

மட்டக்களப்பின் தெற்கே 16 ஆம் மைக்கல் தொலைவில் படுவான் கரை எழுவான் கரையை ஒன்றிணைக்கும் மத்திய இடமாக விளங்கும் களுவாஞ்சியூரின் சூரைக்காடுள்; சூழ்ந்து வர இயற்கை அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற அழகிய இடமே சூரையடியாகும். இத்தகைய சிறப்புமிக்க எழில்மிகுந்த இடத்தில் முருகப்பெருமான் பதி கொண்டு பன்நெடுங்காலமாக பக்தர்களுக்கெல்லாம் அருள் கொடுத்து வரும் ஆலயமே ஸ்ரீ முருகன் ஆலயமாகும். எனவே இவ் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 14.03.2024 ஆம் திகதி வாஸ்து சாந்தியும் மறுநாள் 15.03.2024 ஆம் திகதி கொடியேற்ற அலங்காரத் திருவிழா 9 நாட்கள் நடைபெற்று பங்குனித்திங்கள் ஞாயிற்றுக்கிழமை 24.03.2024 ஆம் திகதி அன்று பங்குனி உத்தர திருநாளில் சமுத்திர தீர்த்த உற்சவம் இடம்பெற்று அன்னதான நிகழ்வோடு நிறைவு பெறவிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து 25.03.2024 ஆம் திகதி திருக்கல்யாணப்பூசையும் திருப்பொன்னூஞ்சல் நிகழ்வும் மறுநாள் 26.03.2024 அன்று வைரவர் பூசையுடன் நிகழ்வுகள் யாவும் இனிது நிறைவு பெறவிருக்கின்றன.

ஆலய வரலாறு அடர்ந்த பற்றைக் காடுகள் நிறைந்த வனச் சோலையும் கடல்வளமும் மருதமரங்கள் தர்ப்பை புற்கள் தாமரைக்கேணியும் தென்னந்தோப்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற அழகு நிறைந்த வனத்தினுள்ளே களுவாஞ்சிகுடியை சேர்ந்த விசுவலிங்கம் மகேந்திரன் 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு வேலை வைத்து முத்துமாரியம்மனாக மனதில் நிறுத்தி குறிப்பிட்ட காலம் வழிபட்டு வந்த தன் பின்னர் அமரர்.க.கந்தசாமி அவ் வேலை முருகப் பெருமானை நினைந்து சிறிய பந்தலிட்டு வழிபட்டு வந்தபோது அதனைத்தொடர்ந்து தனக்கு உதவி நாடி . கணபதிப்பிள்ளை தெய்வநாயகத்தை அழைத்து தன்னுடன் இணைந்து செயற்படுமாறு கேட்டதற்கிணங்க அவரும் இணைந்து பழைய கற்களை எடுத்து வந்து பந்தலை கட்டி வழிபட்டனர். இதனைத் தொடர்ந்து பெருமாள் மற்றும் ஆலயத்திற்கு தலைவராக இருந்து அமரத்துவமடைந்த கி. மகாதேவன் வழிபட்ட வேளை ஒரு நிருவாக சபையை நிறுவி அதற்கு தலைவர் கந்தசாமி, செயலாளர் கி. மகாதேவன் அவர்களும் பொருளாளராக க. தெய்வநாயகமும் மற்றும் பல அன்பர்கள் நிருவாக சபை உறுப்பினர்களாகவும் இணைந்து செயற்பட்டு வந்தனர். பின்னர் ஓலைக்கிடுகினால் கொட்டகை அமைத்து வேலுக்குப் பதிலாக முருகப்பெருமானின் சிலையை வைத்து வழிபட்டனர். இதனைத் தொடர்ந்து ஆகம விதிக்கமைய ஒரு ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் கிராம மக்களிடம் நிதி அறவீடு செய்து ஆலயம் அமைத்து 2011ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்து ஆலயம் புதுப்பொலிவு கண்டது.

வேல் வைத்து வழிபட்ட ஆரம்ப காலத்தில் சிவஸ்ரீ சுப்பிரமணியம், ஜெகதீஸ்வரக் குருக்கள் குறுகிய காலம் பூசை செய்து வந்ததுடன் அதனைத்தொடந்து ஆலயத்திற்கு நிரந்தர குருவாக கிரியாதிலகம், கிரியா வித்தகர், கிரியா ஜோதி அமரர் முருகுப்பிள்ளை முத்துக்குமாரன் குருக்கள் பூசை திருவிழாக்களை நடாத்தி வந்தனர். பின்னர் அவரைத் தொடர்ந்து மகன் சிவஸ்ரீ மு. அங்குசசர்மா அக்கடமையை செய்து வருகின்றார் ஆலய திருவிழா நிகழ்வுகளை சோதிட விற்பன்னர் சாமஸ்ரீ சிவஸ்ரீ ச.மயூரவதன சர்மா மேற்கொண்டு வருகின்றார்.

இவ்வாலயத்தின் அலங்கார உற்சவம் நிறைவு பெற்று திருப்பொன்னூஞ்சல் நிகழ்வுக்கான பாடலை இயற்றி நூலுருவாக்கம் செய்து வெளியீடு செய்திருந்தார் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி பாக்கியரெத்தினம் ஆறுமுகம்.

கலைச்சுடர், இலக்கிய வித்தகர்
நாராயணப்பிள்ளை நாகேந்திரன்
ஓய்வு நிலை அதிபர்
களுவாஞ்சிகுடி.

யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 79



அணுத்துணிக்கைகள் ஒருவித நீள்வட்டப் பாதை சுழற்சியில் இருந்து கொண்டு சுயமாக உருவாகிய சக்திப் புலத்தினால் மிக நுண்ணிய துணிக்கைகள் அதிர்ந்துகொண்டு உள்ளதாக க் கூறுகிறது. இந்த சுயமாக இயங்கும் சக்திப் புலம் ஹிக் போஸன் சக்திப் புலம் எனப்படுகிறது. இந்த சக்திப்புலம் எங்கிருந்து வருகிறது என்பதை அறிவியல் இன்னும் கண்டு பிடிக்க முடியாததால் இவை சுய இருப்பு உடைய சக்திப் புலங்கள் என்று அறிவியல் கூறுகிறது.

இதனால் இவை கடவுள் துணிக்கைகள் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆற்றலின் மூலமும், இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமும் இந்திய தத்துவ ஞானத்தால் "நாதம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த நாத சக்தி எங்கும் நிறைந்த தும் இயற்கையின் மையமானதும், நுண்ணியதுமாக இருந்து கொண்டு எல்லா சக்திகள், அதிர்வுகள், அசைவுகளுக்கும் மூலமாக இருக்கிறது. இயற்கையை ஆழமாக ஆராய்ந்த அறிஞர்கள் மிக நுண்ணிய சப்தம் ஓங்காரமாக இருப்பதாக க் கூறுகிறார்கள். இந்த ஓங்கார நாதம் சுயமாக வெளிப்பட்ட எங்கும் நிறைந்த, நித்தியமான உணர்வு சக்தியான பிரம்மத்திலிருந்து வெளிப்பட்ட பரிணாம அதிர்வாகும். கடிகாரத்தில் உள்ள ஊசலை அலையவிட்டால் அது தொடர்ச்சியாக கடிகாரத்தை நாமாக நிறுத்தும் வரை அசைந்து கொண்டிருக்கும் என்பதை நாமறிவோம்.

இதைப்போன்று பிரபஞ்சத்தில் இருக்கும் நுண்ணிய துணிக்கைகள் ஓங்காரம் எனும் நாதத்தினால் தூண்டப்பட்டு அசைந்துகொண்டிருக்கிறது.

இயற்கையின் சுழற்சி எப்படி ஒரு விளையாட்டு ஊசல் சுழன்றுகொண்டு இருக்கிறதோ அப்படி சுழன்று கொண்டு இருக்கிறது. இந்த விளையாட்டு ஊசலின் இயக்க சக்தி சிறிது காலத்தில் தேய்ந்து விடும் ஆனால் நித்தியமான பரிணாம சக்தியான பிரம் மத்தின் இயக்க சக்தி எப்போதும் தேய்மானம் அடையாமல் நிரந்தரமாக இருக்கிறது.

சப்த சுரங்கள் என்பவை ஓங்காரத்தின் ஏழு வித்தியாசமான அதிர்வுகளாகும். இந்திய இசையினை பாரம்பரிய இசை, மெல்லிசை என இரண்டு விதமாக பிரிக்கலாம். பாரம்பரிய இசையின் அமைப்பினை சுரம், பதம், லயம், மார்க்கம் என நான் கு பகுதிகளுடையதாக பிரிக்கலாம். சுரம் இல்லாத பாடல்கள் அபிதான வான எனப்படும். இவை அபிவாதனம் – உரையாடல் செய்யும் போது பாவிக்கும் கோர்வையான சொற்களைக் குறிக்கும்.

ஓங்காரம் என்ற மூல நாதம் பிரபஞ்சத்திலுள்ள எல்லா அதிர்வு சக்திகளினதும் தொகுப்பாகும். இதுவே அனைத்து இசைச் சுரங்களிற்கும் மூலமாகும். எப்படி சூரியனிலிருந்து ஏழு நிறங்கள் வெளிப்படுகிறதோ அதைப்போல் ஓங்காரத்திலிருந்து சப்த ஸ்வரங்கள் வெளிப்படுகிறது. இந்த இசைச் சுரங்கள் ஸ, ரி, க, ம, ப, த, நி என ஏழாக வெளிப்படுகிறது.

அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

19388 ஸ்ரீ கிருஷ்ணர் மகா விஷ்ணுவின் தசாவதாரங்களில் எத்தனையாவது அவதாரம்?
எட்டாவது

19389 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் அச்சாலன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
தற்போதும் உள்ளவர்

19390 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் அற்புதன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
வியக்கத்தக்கவன்

19391 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் ஆதித்தியன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
அதிதியின் மகன்

19392 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் அஜெயன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
பிறப்பையும், இறப்பையும் வென்றவன்

19893 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் அமிர்தன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
மரணம் அற்றவன்

19894 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் அனந்தன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
அளவிட முடியாதவன்

19895 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் அனயன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
தலைமை அற்றவர்

19896 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் அபாரஜித் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
வெல்லப்பட முடியாதவன்

19897 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் பிகாரி என்பதற்குரிய அர்த்தம் என்ன? எங்கும் பயணம் செய்பவன்

19898 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் பாலகிருஷ்ணன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
குழந்தை கிருஷ்ணன்

19899 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் தான வேந்திரன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
செல்வங்களை அருள்பவன்

19900 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் தயாநிதி என்பதற்குரிய அர்த்தம் என்ன?
இரக்கமுள்ள அருளாளன்

19901 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் தேவகி நந்தன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
தேவகியின் மகன்

19902 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் தேவகி நந்தன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
தேவகியின் மகன்

19903 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் தர்மாதியட்சர் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
தரும தேவன்

19904 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் துவாரகாபதி என்பதற்குரிய அர்த்தம் என்ன?
துவாரகையின் தலைவர்

19905 ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களில் கோபாலப்பிரியன் என்பதற்குரிய அர்த்தம் என்ன?
ஆவினங்களை நேசிப்பவர்

ஸ்ரீ சக்கரம்

சக்தியூட்டப்பட்ட மந்திர தந்திர சக்திகளைக் கொண்ட யந்திரங்கள் உலகில் பல்வேறு உள்ளன. பல்வேறு கோரிக்கைகளுக்காக அவற்றை குறிப்பிட்ட முறைகளின் படி சாதகர்கள் உபாசனை செய்து தாம் விரும்பும் பலனைப் பெற்று வருகின்றார்கள். அனைத்து யந்திரங்களையும் சாதாரண நிலையில் வழிபட முடியாது, வழிபடக் கூடாது. அதன் காரணம் அதில் உள்ள தாந்த்ரீக, மந்திர சக்திகளே. சில யந்திரங்கள் தாந்த்ரீக சக்தி கொண்டவை, தாந்தீரீக வழிபாட்டுடன் சம்மந்தப்பட்டவை. அவற்றை வீடுகளில் வைத்து வழிபடக் கூடாது. ஏன் எனில் அவற்றை வழிபட பல விதமான ஆசாரங்கள், நியமங்களை அனுஷ்டிக்க வேண்டும். ஒரு குருவின் உபதேசம் பெற்றோ, ஒரு குருவின் மூலமோ யந்திரங்களை பூஜை செய்ய வேண்டும். சக்தியூட்டப்பட்ட எந்திரங்களில் பல தேவதைகள் குடி கொண்டு இருக்கின்றார்கள் என்பதினால் தவறான பூஜா முறைகள் விபரீதமான விளைவுகளை குடும்பத்தில் ஏற்படுத்தி விடும்.

யந்திரங்களில் மிகவும் உயர்ந்ததும், சாமான்யங்களினால் எளிதில் வணங்கப்படக் கூடிய யந்திரம் ஸ்ரீ சக்ரம் எனப்படும் ஸ்ரீ சக்ர பூர்ண மகாமேரு ஆகும். சில குறிப்பிட்ட காரண காரியங்களுக்காக அதையே ஸ்ரீ வித்யா பூஜை என்ற பெயரில் விஸ்தாரமாக செய்வதும் உண்டு.

ஸ்ரீ சக்கரம் என்பது ஆதிபராசக்தியின் சூட்சும ரூபமாகும். ஸ்ரீ சக்கரத்தின் நடுவில் உள்ள பிந்துவில் அவள் சூட்ஷம வடிவில், ஸ்தூல ரூபமாக அமர்ந்திருக்க, அவளை காரண வடிவத்தினால் அதாவது மந்திர ஒலியினால் பூஜிக்க வேண்டும். பொதுவாக ஸ்ரீ சக்கரம் என்பது பரமேஸ்வரனும், பார்வதி தேவியும் இணைந்து அமர்ந்து உள்ள இடமாகும்.

அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த தேவியை உபாசித்தோ அல்லது முறையான பூஜை செய்தோ அந்த தேவியின் அருளை பெறுகின்றவர்கள் வெகு காலம் ஜீவித்து இருப்பார்கள். கல்பத்துக்கு முடிவு ஏற்பட்டாலும், அவர்களுடைய ஆத்மாவுக்கு (ஸ்ரீ சக்ரம் ஜீவனுக்கு) முடிவில்லை. கல்ப ஜீவிகள் என்றே அவர்களை கூற வேண்டும். உருவமுள்ள எந்த பொருளுக்கும் அழிவு உண்டு. ஆனால் உபாசகர்கள் சரீரம் என்ற உருவத்துடன் இருந்தவாறு அவளை உபாசித்து அவளது அருளை பரிபூரணமாக பெற்று விட்டால், அவர்களுடைய சரீரம் அழியலாம், ஆனால் அவர்கள் ஆத்மாவுக்கு அழிவில்லை என்பதே ஸ்ரீ சக்கர உபாசனையின் மகிமை ஆகும் என்பது ஐதீகம். அதையே சௌந்தர்யலஹரி சுலோகம் 99 தின் தாத்பர்யத்திலும் கூறப்பட்டு உள்ளது.

அதைபோலவேதான் ஸ்ரீ சக்கர தேவியின் பெருமையையும், மேன்மையையும் கூறும் லலிதா சஹஸ்ரநாமத்தின் ஒவ்வொரு ஸ்லோகத்தையும் அனுதினமும் படித்து, தேவியை பூஜிக்கும் சாமானியர்களுக்கு சர்வ சௌபாக்கியமும் கிட்டும் என்பதும் உண்மை ஆகும். அவர்களது வீடுகளில் உள்ள துர்தேவதைகள் ஓடி ஒளிந்து கொள்ளும், வியாதிகள் விலகும், சத்ருக்கள் அழிவார்கள், மன அமைதி கிடைக்கும். ஸ்ரீ சக்கரத்திற்கு மேலான யந்திரமோ, ஸ்ரீ வித்யாவுக்கு நிகரான மந்திரமோ, ஸ்ரீ லலிதாம்பிகைக்கு மேலான தெய்வமோ இல்லை என்பது அனைத்து மகான்களாலும், பண்டிதர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து ஆகும்.

(தொடரும்)

IMF பிரதிநிதிகளின் பேச்சு
வார்த்தைக்கு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு



பயணிகள் மீது...

மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார். கெப்ரக வாகனத்தை செலுத்தியவர் 17 வயதான இளைஞர் என்றும் அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்கள் மூவரும் நேற்று அநுராதபுரம் மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோதே,இவர்களுக்கு (20) வரை விளக்கமறியல் வழங்கப்பட்டது. அநுராதபுரம், ரம்பேவ மிஹிந்தலைக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் 15, 19 மற்றும் 21 வயதுடைய மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். மூவரும் அநுராதபுரம், பிஹிம்பியகொல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவ்விபத்தில் காயங்களுக்குள்ளான இரண்டு சிறுமிகளும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் காலை ரம்பேவயிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த கெப்வண்டி ஒன்றே வீதியில் பயணித்த மேற்படி ஐந்து நபர்கள் மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

மக்களுக்கு நிவாரணம்...

மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

பூஜ்ஜியத்திற்கு வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்து கட்சிகள் சார்ந்த மக்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே வேளை நான் ஒரு போதும் குறுகிய அரசியலுக்கு அகப்பட மாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்று காலி முகத்திடலுக்கு செல்லாத வர்கள் நாட்டை பொறுப்பேற்பது எவ்வாறு என கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, அவ்வாறான நிலைமையில் இருந்திருந்தால் தாமும் நாட்டைப் பொறுப்பேற்றிருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அவர்கள் அன்று காலி முகத்திடலில் தாக்குதலுக்குள்ளாகும் போது நான் ஷெங்ரிலா ஹோட்டலில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தேன் என தெரிவித்த ஜனாதிபதி, வெளியில் இருந்த போராட்டக்காரர்கள் தாம் அங்கு இருப்பதை அறிந்திருந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ச நல்லவர் அல்ல என கூறும் ஐக்கிய மக்கள் சக்தியினர் இன்று மகிந்தவின் ஆசிரியரை அந்தப் பக்கம் அழைத்துக் கொண்டுள்ளனர் என்றும் மஹிந்த நல்லவர் இல்லை என்றால் மஹிந்தவின் ஆசிரியர் எவ்வாறு நல்லவராக முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். 'நிஜம்' என்ற தொனிப் பொருளில் குளியாப்பிட்டி நகர சபை விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்கள் வெள்ளம் திரண்டு காணப்பட்டது.

அந்த வகையில் குளியாப்பிட்டி உட்பட குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த நகர சபை விளையாட்டரங்கில் அணி திரண்டி ருந்தமை குறிப்பிடத் தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் கல்வி அமைச்சரு மான அகிலவிராஜ் காரியவசம் மேற்படி கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, கொழும்பு மாவட்ட தலைவர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

தொல்பொருள் பகுதிகளை...

இலக்காக உள்ளது. வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறி மலை உள்ளது. இந்த பிரதேசமானது வனப்பரிபாலன திணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் உள்ளது. அத்தோடு வெடுக்குநாறி மலையானது தொல்பொருளியல் பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வனப்பரிபாலன திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் தண்ணீர் பவுசர், உழவு இயந்திரங்கள் உள்ளிட்டவற்றை கொண்டுசெல்வது சட்டத்திற்கு முரணானதாகும்.

அதுமட்மன்றி அப்பகுதிகளில் பிரவேசிப்பதும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கையாகும். ஆகவே, உரிய அனுமதிகளைப் பெறாது அப்பகுதியில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு பொலிஸார் தமக்கு அதிகாரமளிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பது முக்கியமான விடயமாகிறது. எந்தவொரு விடயங்களையும் கருத்தில் கொள்ளாது பொதுமக்கள் தாம், விரும்பியவாறு செயற்படுவதாக இருந்தால் நாட்டில் எந்தவொரு சட்டங்களும், நீதிமன்றங்களும் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

வெடுக்குநாறி மலை விடயத்தில், அப்பாவி தமிழ் மக்களின் பின்னால் சில அரசியல் தரப்பினர் உள்ளனர். அவர்களே தமிழ் மக்களை துண்டிவிட்டு முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

தமிழ் மக்கள் அவ்விதமான தூண்டுதல்களுக்கு ஆளாவது போன்று பெரும்பான்மை சிங்கள மக்களும், பௌத்த மதகுருக்களும் இதற்கு பதிலளிப்பதற்கு தூண்டப்படுகின்றனர்.

இரண்டு தரப்பிலும், தூண்டப்படுகின்ற தரப்பினர் குழப்பங்கள் ஏற்படுத்தி, முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுவதற்கு வித்திடுகின்றனர். இதில் அரசியல் தரப்பினர் தமது சுயலாபங்களை தேடிக்கொள்கின்றனர்.

எனவே, இவ்விதமான நிகழ்வுகளை தொடர்ச்சியாக அனுமதிக்க முடியாது. ஆகவே தொல்பொருளியலைப் பாதுகாப்பது தொடர்பாக உரிய சட்ட நடைமுறை பின்பற்றப்படும். அதேபோன்று தொல்பொருளியல் பகுதிகளாக அடையாளம் காணப்படும் பகுதிகள் பௌத்தத்துக் குரியனவா இல்லையா என்பது முக்கியமான விடயமல்ல. அனைத்து தொல்பொருளியல் பகுதிகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். ஆகவே, இந்த விடயத்தில் இனக் குழுமங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதால் வெறுமனே அரசியல் குழுவினரே இலாபமீட்டுகின்றனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்றார்

நெல் கொள்வனவுக்காக...

மூன்று நெல் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்த நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட :

நெல் சந்தைப்படுத்தல் சபை 250 மில்லியன் ரூபா நிதியை

நெல் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கியுள்ளது.இதற்கமைய மேற்படி நெல் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிவப்பு நாடு நெல் ஒரு கிலோ 150 ரூபா உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது. அதே வேளை நெல் கொள்வனவுக்காக திறைசேரியிடமிருந்து ஏழு பில்லியன் ரூபா நிதி கிடைக்கவுள்ளது. இது தொடர்பில் அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள பத்திரம் தொடர்பில், இன்றைய தினம் நடைபெறவுள்ள அமைச்சரவையில் விசேட கவனத்திற்கு எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொழில் உரிமையை...

கட்டளைச் சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஊடகவியலாளர்கள் தொழிலாளர் மட்டத்தை விட குறைந்த மட்டத்திலேயே கணிக்கப்படுகின்றனர் என, அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்துள்ள அமைச்சர்:

'கருசரு' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய வேலைத் திட்டம் மூலம்தான், புதிய தொழில் வேலை வாய்ப்புக் கட்டளைச் சட்டம் தயாரிக்கப்பட உள்ளது. இந்த கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் கௌரவம் என்ற பிரிவு உள்வாங்கப்படுவதுடன் ஊடகவியலாளர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் உள்ளிட்ட இதுவரை நாட்டில் நடைமுறையில் உள்ள பல்வேறு துறைகளை உள்ளடக்கி பல்வேறு பிரிவுகளிலும் தொழில் ரீதியில் காணப்படும் பாதிப்புகளை இல்லாதொழிப்பதற்கு இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்வேறு தொழில் துறை சார்ந்தவர்கள் இவ்வாறான பாதிப்புகளை எதிர் கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்ற நன்மைகள் கிடைப்பதில்லை. அது தொடர்பில் அவர்கள் முறைப்பாடு செய்வதற்கும் ஒரு நிறுவனம் கிடையாது.

இதனைக் கவனத்திற் கொண்டு இந்த அனைத்து துறையினரையும் தொழில் திணைக்களத்தின் கீழ் கொண்டு வந்து, அவர்களுக்கு உரிய கௌரவமும் தொழில் உரிமையும் வழங்குவதே எமது எதிர்பார்ப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறக்குமதிக்கான செலவு...

யின் அறிக்கையை சுட்டிக்காட்டி பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானக் கல்வி பிரிவின் பேராசிரியர் வசந்த அதுகோரள தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பொருள் கொள்வனவுக்காக செலவிடப்பட்டுள்ள மேற்படி இந்தி கடந்த வருடம் ஜனவரி மாதத்தோடு ஒப்பிடுகையில் நூற்றுக்கு 14 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் அது 110 கோடி அதிகரிப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார். உணவுப் பொருட்கள் இறக்குமதிக்காக 5028 கோடி ரூபாவும் ஏனைய பொருட்களுக்காக 4007 கோடி ரூபாவும் இவ்வாறு செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின்...

பல்கலைக்கழக பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலருடன் உயர் பதவி வகிக்கின்ற பிரமுகர்களும் புத்தக நிலையங்களில் இந்நூலை கொள்வனவு செய்துள்ளனர்.

இதில் அதிகமானோர் அரசியல்வாதிகள் என்றும் விஜித யாப்பா புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் தலைவர் விஜித யாப்பா தெரிவித்துள்ளார்.

இந்த நூல்களை கொள்வனவு செய்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள புத்தக சாலைகளிலும் பாரிய அளவிலான ஓடர்கள் கிடைத்ததாகவும், இந்த நூல் வெளியிடப்பட்டதன் பின்னர் மேலும் ஒரு தொகை நூல்கள் விற்பதற்காக கொண்டுவரப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சூதாட்ட நிலையத்திலிருந்த...

கொஸ்கொட, பலபிட்டிய, களுத்துறை, பேருவளை, பெந்தர, அஹுங்கல்ல ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்து,இப்பெண்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளர். அளுத்கம நகரில் வாராந்த சந்தை அமைந்துள்ள சொகுசு வீடொன்றின் மேல் மாடியிலேயே இந்த சூதாட்ட நிலையம் நடத்தப்பட்டு வந்துள்ளது.

அந்த மாடி வீட்டின் கீழ் தளத்தில் அழகு கலை நிலையம் நடத்துவதாக காண்பித்தே, இந்த சூதாட்ட நிலையம் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அளுத்கம பொலிஸாரினால் உளவாளி ஒருவரை பயன்படுத்தி சூட்சுமமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கமைய மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சூதாட்டத்தில் ஈடுபட்ட நபர்களிடம் காணப்பட்ட பணத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.கைதான சந்தேக நபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாரிய சொத்துக்களுள்ள...

நபர்களின் அறிக்கைகளை புதுப்பித்தல் மற்றும் அதில் உள்ள விடயங்கள், குறைபாடுகளை இனங்காண்பதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த...

நேற்று (10) விடுவிக்கப்பட்டன. இதற்கான ஆவண பத்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. யாழ் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 70 ஏக்கர் காணிகளும், கிளிநொச்சி மாவடத்தில் சுமார் 40 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. காணிகளுக்கான ஆவண பத்திரங்கள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கா மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பதில் அரசாங்க அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன .

உள்ளூராட்சி சபை...

மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார். நிரந்தரமற்ற நிலையில் சேவையில் ஈடுபட்டுள்ள உள்ளூராட்சி சபை ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்காக அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரமும் தற்போது கிடைத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இந்த விசேட செயற் திட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் பணியாற்றும் 8,400 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்றைய பலன்கள்
(11.03.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

மேஷம்: வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளை சமாளிக்கும் சூழல் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் சலுகைகள் கிடைக்கும்.

ரிஷபம் : வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போதுமான பொருளாதாரம் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும்.

மிதுனம்: வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் பணிபுரிய அழைப்புகள் வரலாம். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு தன்னலமற்ற சேவைக்காக பாராட்டு குவியும்.

கடகம்: வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு அனுபவஸ்தர்களின் ஆலோசனை கை கொடுக்கும். கலைஞர்களுக்கு கவுரவ பதவி கிடைக்கும் மாணவ மாணவிகளுக்கு மறதி அதிகரிக்கும்.

சிம்மம்: பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சியில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான லாபம் கைகளில் புரளும்.

கன்னி: பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பாதை புலப்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திற்கான இடமாறுதல் வரலாம்.

துலாம்: குடும்பத்தில் உள்ளவர்களுக்கான தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்தாலும் அவர்கள் நன்றி காட்ட மாட்டார்கள். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம்.

விருச்சிகம்: பிரபலங்களின் நட்பால் பெருமை காண்பீர்கள். நாணயமும் நம்பிக்கையும் கொண்டவர்கள் உங்கள் தொழில் வளர்ச்சிக்கு வழி காட்டுவர்.

தனுசு: உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும்.

மகரம்: பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் வளர்ச்சி அதிகரிக்கும்.

கும்பம்: வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வருமானம் திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம்.

மீனம்: வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் உண்டு.

எதிர்கால சந்ததிக்காக... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

முப்படை வீரர்களின் பரசூட் கண்காட்சி இந்த நிகழ்வை வண்ணமயமாக்கியதுடன், பொலிஸ் குதிரைப்படை பிரிவின் குதிரைப்படைக் கண்காட்சியும் இடம்பெற்றது.

'எதிர்கால சந்ததியினருக்கு நிலையான இந்து சமுத்திரத்தை உறுதி செய்தல்' என்ற தொனிப்பொருளில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஓவியம் மற்றும் சமூக ஊடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கடல்வாழ் உயிரினங்களின் வடிவத்திலான அழகான பட்டங்களும் வானில் பறக்கவிடப்பட்டன.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியச் செயலாளர் நாயகம் சல்மான் அல் பாரிசி, உறுப்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திர அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஆதி சிவன்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறான நிலையில் குறித்த ஆலயப் பகுதியில் பொலிஸார் இவ்வாறான தடைகளையும் அடாவடித் தனங்களையும் செய்வதற்கு யார் அனுமதி கொடுத்தது? இதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

அமைச்சரவையின் கவனத்திற்கும் இவ்விடயத்தை கொண்டு செல்லவுள்ளேன்.

இனி வருங்காலங்களில் பொலிஸார் இவ்வாறான செயற்பாடுகளை மெற்கொள்ளாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தலைமையில்...

தலைவர் அனுரகுமார திசாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆகியோருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் இக்கலந்துரையாடலில் பங்கேற்பதற்கு வேறு பிரதிநிதிகள் எவராவது விரும்பினால், அவர்களுக்கும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய கலந்துரையாடலில் நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதியமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பங்கேற்குமாறு பாராளுமன்ற நிதிக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாஎம், பிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரமழான் மாத தலைப்பிறை...

புனித நோன்பை ஆரம்பிப்பர். பிறை தென்படாவிடின் புனித ஷஹ்பான் மாதத்தை நாளை செவ்வாய்கிழமை 30ஆக பூர்த்தி செய்து, புனித ரமழான் மாதம் புதன்கிழமை ஆரம்பமாகும்.

மேற்படி பிறை பார்க்கும் மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரசீன் உள்ளிட்ட பள்ளிவாசலின் நிர்வாகிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிறைக் குழு, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிநிதிகள், இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட உத்தியோகத்தர் மற்றும் ஏனைய பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள், தரீக்காக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டில் எப்பாகத்திலாவது பிறை தென்பட்டால் கீழ் உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பிறை தென்னபட்டதற்கான தகவல்களை – 0112432110 / 0112451245 / 0777353799 தொடர்புகொண்டு வழங்கலாம்.

மறைந்த முன்னாள் அமைச்சரின் நினைவு கூரல் நிகழ்வு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

மறைந்த முன்னாள் அமைச்சரும் மதுகம தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான தயா ரீ பஸ்குவலின் நினைவுகூரல் நிகழ்வும் ஆனந்த சாஸ்திராலய கல்லூரியின் எண்பத்திரெண்டாவது வருட பூர்த்தி வைபவமும் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுப பஸ்குவல் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு விஷேட உரை நிகழ்த்தினார். மறைந்த முன்னாள் அமைச்சரின் உருவச் சிலைக்கு மலரஞ்சலியும் செலுத்தப் பட்டது. அமைச்சரின் குடும்ப உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பிரமுகர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம்

தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்திலுள்ள வீடொன்றுக்கு அருகில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை (08) மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்திலுள்ள வீடொன்றுக்கு அருகில் உயிரிழந்த நிலையில் சிறுத்தை ஒன்று கிடப்பதாக தலவாக்கலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சிறுத்தையை மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

உயிரிழந்த சிறுத்தையின் சடலம் மரண பரிசோதனைக்காக இரந்தனிகல வனவிலங்கு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நபரை நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

வாகன திருட்டுகள் அதிகரிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

காவத்தை மற்றும் பெல்மதுளை பிரதேசங்களில் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதனால் தமது வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். இறுதியாகக் கிடைத்த இரண்டு முறைப்பாடுகளில் காவத்தை நகரில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் திருடப்பட்டுள்ளன.

பெண்களின் உரிமையை வென்றெடுக்க ஹட்டனில் நடைபவனி முன்னெடுப்பு

35,000 கையொப்பங்கள் திரட்டப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பு

ஹட்டன் விசேட நிருபர்.

பெருந்தோட்ட பெண்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம் எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு ஒழுங்கு செய்திருந்த நடைபவனியும் 25 ஆயிரம் கையொப்பங்களை திரட்டி ஜனாதிபதிக்கு அனுப்பும் நிகழ்வும் நேற்று முன்தினம் (09) மாலை ஹட்டனில் நடைபெற்றது.

'பெண்களின் உரிமையை வென்றெடுப்போம்' 'உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற்றுக் கொடுப்போம்', 'பெண்களையும் தாயாக மதிப்போம்' , பெண்களின் சுகாதாரத்தை மேன்மைப்படுத்துவோம்' பெண்கள் எமது நாட்டின் கண்கள் எமது நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருக்கின்றவர்கள் பெண்கள் எனும் வசனங்களை எழுதிய சுலோக அட்டைகளை காட்சிப்படுத்திய வண்ணம் ஊர்வலம் ஹட்டன் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலிருந்து ஆரம்பமாகி ஹட்டன் திருச்சிலுவை ஆலயம் வரை சென்றடைந்து அங்கு சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

பெருந்தோட்டப்பகுதியில் வாழும் பெண்கள் காலையில் தொழிலுக்கு சென்றால் மாலை வரை விடாமல் தொழில் செய்து குடும்பத்தையும் சரி நாட்டையும் சரி சமூகத்தையும் சரி உயர்த்துகின்றவர்களாகவே எமது பெண்கள் இருக்கின்றார்கள். எனவே விஷேடமாக இம்மாதம் மகளிருக்கு வழங்கப்பட்டு இருக்கின்ற மாதம் என்றபடியால் பெண்களின் உரிமைக்கு முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் உரிமையை பெற்றுக் கொடுக்கின்ற ஒரு சிறப்பு வேலை திட்டமாக இந்த வேலை திட்டம் நடைபெற்றது.

நோன்பு கால உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு

மாவத்தகம தினகரன் நிருபர்

பரக்கத் தொண்டுநிறுவன அனுசரணையுடன் பெண்கள் வலுவூட்டல் அமைப்பின் ஏற்பாட்டில் கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்திலுள்ள விதவைத் தாய்மார்களுக்கான நோன்பு கால உலருவுணப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கட்டுகஸ்தோட்டை சாஹிரா கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் அமைப்பின் தலைவி எம். ஆர். பாத்திமா ரியாஸா தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பரக்கத் தொண்டு நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி முஜீப் கலந்து கொண்டு சிறப்பித்தார். இதில் 100 க்கும் மேற்பட்ட விதவைத் தாய்மார்கள் அரிசி, மா, உள்ளிட்ட அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் கொண்ட உலருணவுப் பொதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

ரூ. 180,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 மார்ச் 13ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09124F147	LKA18224I130	LKA36425C142	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	50,000	75,000	55,000	180,000

ஏல விற்பனைத் திகதி : 2024 மார்ச் 13
தீர்ப்பனவுத் திகதி : 2024 மார்ச் 15
வழங்கப்படும் திகதி : 2024 மார்ச் 15
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 மார்ச் 13 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

முதனிலை வணிகர்களின் பட்டியல்

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி	2317777
கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட்	2675096

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

என்.டி.வை.சி. வீரசிங்க
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

சியபத்த பினான்ஸ்
பெறுமதிமிக்க ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 91 வாகனங்கள்
2024 மார்ச் 16 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 10.00க்கு
சியபத்த பினான்ஸ் வாகன கூடம்,
இல. 344, சிறிமங்கலவத்தை, மம்பே, பிலியந்தலை.
பரீட்சிப்பது மார்ச் 13 , 14 மற்றும் 15 ஆம் திகதிகளில்
ஏல விற்பனை இடத்தில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை
அழையுங்கள் : 0117 605245 (கூடம்) / 076 8905692 (அஜித்)

VEHICE NO.	MODEL	YEAR
	MOTOR CAR	
NW-CBA-0XXX	MICRO,X-25	2017
WP-CAR-6XXX	MICRO,PANDA CROSS	2016
WP-CAV-9XXX	DATSUN REDI GO	2016
WP-CAW-6XXX	MAZDA,RX 8 1.3A	2014
WP-KL-8XXX	MARUTI,ALTO K10	2011
WP-KR-2XXX	PEUGEOT,508	2011
UP-KH-0XXX	MARUTI,ZEN	2008
WP-KM-2XXX	MITSUBISHI,DBA-CW5W OUTLANDER	2008
WP-KM-5XXX	TOYOTA,DBA ACA31W RAV4	2007
WP-KF-2XXX	MAZDA,3	2007
WP-JE-0XXX	PEUGEOT,406 EXECUTIVE AUTO	2001
SP-KF-3XXX	NISSAN,TA-K11-MARCH	2001
CP-JF-4XXX	HONDA,CITY VTEC 4A	2000
WP-GT-5XXX	SUBARU,FORESTER	1999
16-5XXX	TOYOTA,COROLLA AE81	1986
15-8XXX	TOYOTA,AT150	1985
14-2XXX	DAIHATSU,CHARADE TURBO	1984
	MOTOR JEEP	
WP-KG-8XXX	JEEP,GRAND CHEROKEELAREDO	2005
WP-KD-1XXX	JEEP,GRAND CHEROKEE LIMIT	2005
	MOTOR MINI TRUCK	
WP-DAF-7XXX	MAHINDRA,B M T PLUS MDI	2017
WP-DAD-5XXX	TATA,ACE HT 2	2016
WP-DAE-0XXX	TATA,SUPER ACE	2016
NW-DAB-8XXX	TATA,ACE XPRESS CDI	2015
SP DAF 4XXX	MAHINDRA,JEETO S6 16	2015
WP-PV-7XXX	MAHINDRA,MAXXIMO PLUS	2013
SP-PU-4XXX	FOTON,BJ1010V0JA3-2	2012
CP-PD-6XXX	FAW,CA1040K3RE31	2012
	MOTOR COACH	
WP-NA-0XXX	LANKA ASHOK LEYLAND VIKING	2005
	MOTOR BIKE	
WP-BET-7XXX	HERO,DASH VX	2016
	MOTOR LORRY	
NC-LM-8XXX	LANKA ASHOK LEYLAND,1616	2017
WP-LN-6XXX	FOTON,BJ1049V9JEA-KAI	2017
CP-LK-0XXX	LANKA ASHOK LEYLAND,COMET TIPPER 1613	2012
WP-LC-7XXX	JAC,HFC3048K DUMP TRUCK	2006
WP-LJ-1XXX	MITSUBISHI PA-FE82DE-CANTER	2006
WP-LA-8XXX	LANKA ASHOK LEYLAND,COMET TIPPER	2005
SG-LC-5XXX	SUBARU,LE TT2	2004
WP HD-3XXX	MITSUBISHI,KC-FB501B-TRUCK	1997
226-4XXX	TOYOTA,LH80	1993
	THREE WHEELER	
WP-ABQ-2XXX	BAJAJ,RE	2017
SG-ABF-0XXX	BAJAJ,RE	2015
CP ABB-5XXX	BAJAJ,RE	2015
WP-ABC-2XXX	BAJAJ,RE	2015
WP-ABG-0XXX	BAJAJ,RE	2015
SG-ABF-5XXX	BAJAJ,RE	2015
WP-AAV-8XXX	BAJAJ,RE	2014
WP-AAW-8XXX	BAJAJ,RE	2014
WP-AAU-8XXX	BAJAJ,RE	2014
WP-AAU-3XXX	BAJAJ,RE	2014
WP-AAJ-7XXX	BAJAJ,RE 205	2013
SG-AAN-1XXX	BAJAJ,RE 205	2013
CP-AAC-8XXX	BAJAJ,RE 205	2012
WP-AAD-7XXX	BAJAJ,RE 205	2012
WP-AAE-1XXX	TVS,KING	2012
WP-YS-3XXX	BAJAJ,RE 205	2011
NW-YV-0XXX	BAJAJ,RE 205	2011
CP-YO-3XXX	BAJAJ,RE 205	2011
SG-YB-2XXX	BAJAJ,AR4S-UG	2010
WP-YA-8XXX	BAJAJ,AR4S UG	2010
WP-QZ-9XXX	BAJAJ,AR4S-UG	2010
WP-YA-9XXX	BAJAJ,AR4S-UG	2010
WP-QZ-7XXX	BAJAJ,AR4S UG	2010
WP-YA-9XXX	BAJAJ,AR4S UG	2010
WP-YF-3XXX	BAJAJ,RE 205	2010
WP-YI-5XXX	TVS,KING	2010
WP-QX-9XXX	BAJAJ,AR4S UG	2010
WP-QX-4XXX	BAJAJ,AR4S UG	2010
WP-QS-1XXX	BAJAJ,AUTO AR4S	2009
SP-QU-6XXX	BAJAJ,BAJAJ 4 S	2009
WP-QS-3XXX	BAJAJ,BAJAJ 4 S	2009
WP-QS-3XXX	BAJAJ,BAJAJ 4S	2009
SG-QS-5XXX	BAJAJ,BAJAJ 4 S	2009
WP-QV-2XXX	BAJAJ,BAJAJ 4 S	2009
SG-QP-9XXX	BAJAJ,AUTO AR4S	2008
SG QO-1XXX	BAJAJ,AUTO AR4S	2008
CP-QL-3XXX	BAJAJ,AUTO AR4S	2007
SG-QJ-3XXX	BAJAJ,AUTO AR4S	2007
WP-QF-9XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2006
WP-QI-8XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2006
WP-QE-1XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2006
WP-QF-4XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2006
WP-QI-6XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2006
WP-QI-5XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2006
WP QH 4XXX	BAJAJ AUTO RE 2 STROKE	2006
WP-QB-5XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2005
SP-QD-5XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2005
WP-QC-5XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2005
WP-QC-3XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2005
WP-JG-6XXX	BAJAJ,AUTO AR4S	2004
SP-HE-3XXX	BAJAJ,AUTO RE 2 STROKE	2003
WP-GQ-0XXX	BAJAJ,BAJAJ AUTO	2002
SG-GH-9XXX	BAJAJ,BAJAJ AUTO	2001

விற்பனை நிபந்தனைகள்:

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 2,000 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 வீதம் மிளளிக்கப்படாத வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைமனு பெறுமதியில் மிளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் என்பதோடு, எஞ்சிய 75% தொகையை 2024 மார்ச் 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00க்கு முன்னர் சியபத்த பினான்ஸ் பீஎல்சி, சியபத்த கோபுரம், 111, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 0இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு கிளைக்கும் பணமாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ஏ என் அல்கெவத்த ஒக்ஷனியர்(ர்)
A N ALGEWATHTHA AUCTIONEER
No.333, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com
AUCTIONEER Black Tie Service with True Aloha!
www.lankaauction.lk

ஜாதிக லொதரய் மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளி 2024.03.08 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 5413 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,983,328.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 2 1 6 6 4 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3655 — சீட்டிழுப்பு திகதி 2024.03.08 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,134,225.76
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 12 47 74 76 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டயள் சாளிஸ் வெற்றி இலக்கம் 58635

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1761 — 2024.03.08 — 63978 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 426,480,042.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 18 — வெற்றி இலக்கங்கள் 12 26 32 34 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 VIP — திகதி 2024.03.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0239
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 3 6 1 7 0 9
L7 எழுத்து K — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 26,495,851.76

ராசி சுப பலன் — திகதி 2024.03.08 — சீட்டிழுப்பு இலக்கம் 722 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,175,184.00
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 18 31 43 55 — தனயோக இலக்கம் 16980 — நாளுக்கான விதி எண் 04

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1443 — 2024.03.08 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,102,519.84
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 01 05 24 61 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டயள் சாளிஸ் வெற்றி இலக்கம் 16142

ஜாதிக லொதரய் மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனி 2024.03.09 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 5414 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,630,784.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 7 3 7 0 2 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3656 — சீட்டிழுப்பு திகதி 2024.03.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,331,084.96
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 08 35 56 67 — விசேட எழுத்து N — இலட்சாதிபதி டயள் சாளிஸ் வெற்றி இலக்கம் 28849

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1762 — 2024.03.09 — 75997 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 426,480,042.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 12 15 21 43 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 VIP — திகதி 2024.03.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0240
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 3 8 6 2 3 8
L7 எழுத்து B — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 26,596,714.32

ராசி சுப பலன் — திகதி 2024.03.09 — சீட்டிழுப்பு இலக்கம் 723 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,198,037.04
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 17 43 58 60 — தனயோக இலக்கம் 23586 — நாளுக்கான விதி எண் 01

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1444 — 2024.03.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,240,801.44
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 07 11 46 54 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டயள் சாளிஸ் வெற்றி இலக்கம் 64179

நகர்வலம்

நெதர்லாந்து அரசின் நிதியுதவியில்;

நாச்சியாதீவு – அநுராதபுரம் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாலம் திறந்து வைப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

நாச்சியாதீவு அநுராதபுரம் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் அண்மையில் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு நாச்சியாதீவு வில்லுப்பாதையில் இரண்டாவது பாலத்தின் நிர்மாணப் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெதர்லாந்து அரசாங்கத்தின் கடன் உதவி திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்திற்கு 15 பாலங்கள் கிடைக்கப்பெற்று அவற்றின் இரண்டு பாலங்களே நாச்சியாதீவு பகுதிக்கு கிடைத்துள்ளன. சுமார் ஆறு மாத காலங்களுக்குள் நிர்மாணிக்கப்படவுள்ள இப்பாலம் நூறு வருடங்களுக்கு மேல் நிலைத்திருக்கக் கூடிய பாலமாக இப்பாலங்கள் அமையப் பெறுவதோடு, நாச்சியாதீவு நீர்த் தேக்கத்தின் வான் கதவுகள் ஊடாக வெளியேற்றப்படும் அதிகரித்த நீர் இப்பாலத்தின் ஊடாக வெளியேற்றப்படும் சந்தர்ப்பங்களில் இப்பாதையில் போக்குவரத்து தடைப்படும் நிலை பாலம் கட்டி முடிக்கப்பட்டதும் இத்தடை நீங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாச்சியாதீவு பிரதான பாதையில் முதலாம் கட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட பாலம் அண்மையில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ் எம் சந்திரசேனவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித், திறப்பனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அன்வர் சதாத் (பஸ்மி) உட்பட சமய தலைவர்கள் ஊர் பொதுமக்கள் நலன் விரும்பிகள் அரசியல் பிரமுகர்கள் என பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வுகள்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்றதும் புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதும் சக்தி பீடங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி தேவஸ்தானத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை (08) மாலை முதல் சனிக்கிழமை அதிகாலை வரை இடம்பெற்றன. லிங்கோற்பவருக்கு விஷேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று சிவராத்திரி பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஆலய பிரதான குருவும், தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ எஸ்.பத்மநாபக் குருக்கள் தலைமையில் இந்த மஹா சிவராத்திரி நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

காணாமல் போன மூன்று மீனவர்களும் கடலிலிருந்து மீட்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக கடந்த 6ஆம் திகதி மூன்று பேருடன் கடலுக்குள் சென்று காணாமல் போனதாக தெரிவிக்கப்படும் இயந்திர படகு மற்றும் அதில் பயணித்த மீனவர்கள் மூவரும் கடந்த வெள்ளிக்கிழமை (08) பாதுகாப்பாக கரை திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக கடலுக்குள் மூன்று மீனவர்கள் பயணித்த இயந்திர படகு கரை திரும்பவில்லை என அந்த இயந்திர படகின் உரிமையாளர் கற்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் 6 ஆம் திகதி காணாமல் போனதாக கூறப்படும் இயந்திர படகுடன் ஈச்சங்காடு பகுதியைச் சேர்ந்த 21, 37 மற்றும் 38 வயதுடைய மூன்று மீனவர்களும் இரண்டு நாட்களின் பின்னர் (08) மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இயந்திர கோளாறு காரணமாக குறித்த இயந்திர படகு இயங்காமல் போனதாகவும், பின்னர் கடலில் மிதக்க ஆரம்பித்த குறித்த படகு இந்திய கடல் எல்லையோரம் வரை சென்றதாகவும் கூறப்படுகிறது.

குறித்த மூன்று மீனவர்களும் உணவு, குடிநீர் இன்றி இரண்டு இரவுகளை கடலில் கழித்துள்ளதாகவும், இந்திய மீன்பிடிப் படகில் பயணித்த மீனவர்கள் இவர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் என்பவற்றை வழங்கியுள்ளனர் என தெரியவந்துள்ளது.

கொழும்பில் துரைவி நினைவுப் பேருரை

93ஆவது துரைவி பிறந்த தின நினைவுப் பேருரையும் 25 ஆவது துரைவி நினைவு நாள் உரையும் துரைவி மற்றும் ஜெயம் விருதுகள் வழங்கும் நிகழ்வும் சனிக்கிழமை (09) மாலை கொழும்பு தமிழ்ச் சங்கம் சக்கரப் பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது ராஜ் பிரசாத் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதையும், மேமன் கவி உரை நிகழ்த்துவதையும், ரொட்னி விதானபத்திரன, திருமதி. மகேஸ்வரி சபாரஞ்சன், பொன்னுத்துரை ஆகியோர் விருதுகள் பெறுவதையும், விழாவுக்கு தலைமை வகித்த எம்.வாமதேவன், நினைவு பேருரை நிகழ்த்திய பேராசிரியர் தை.தனராஜ், விருதுகளை வழங்கி வைத்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், ஊடகவியலாளர் திருமதி அன்னலஷ்மி ராஜதுரை ஆகியோரை படங்களில் காணலாம்.

ஓடிக்கொண்டிருந்த தனியார் பஸ்;

சாரதி திடீர் சுகவீனத்தால் பஸ் விபத்து; 13 பேர் காயம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ஓடிக்கொண்டிருந்த தனியார் பஸ்ஸின் சாரதி திடீரென சுகவீனமடைந்ததால் பஸ்ஸைக்கட்டுப்படுத்த முடியாமல் மதவாச்சியில் உள்ள வீடு ஒன்றுடன் உள்ள கராஜ் மீது மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 13 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் 6 பேர் சிறுகாயங்களுக்குள்ளாகி மதவாச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன் படுகாயமடைந்த 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த தனியார் பஸ் வவுனியாவில் உள்ள ஆடை தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்ததுடன் விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் 40 பயணிகள் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இஷாக் ரஹ்மான் எம்.பியின் நிதியுதவியில்

நொச்சியாகம அல் ஹிக்மா முஸ்லிம் பாடசாலையில் அடிக்கல் நாட்டு விழா

கெக்கிராவ குறூப் நிருபர்

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் நிதியொதுக்கீட்டின் கீழ் நொச்சியாகம அல் ஹிக்மா முஸ்லிம் பாடசாலையில் வகுப்பறை கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு (09) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

5 மில்லியன் ரூபாய் செலவில் இரண்டு வகுப்பறைகளை உள்ளடக்கியதாக இக்கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. பாடசாலை அதிபர் ரொஹான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முக்கியஸ்தர்கள் உட்பட பிரதேச அரசியல்வாதிகள், பாடசாலை அபிவிருத்திக்குழு, நொச்சியாகம கல்வியபிவிருத்திக்குழு மற்றும் பாடசாலை பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 04 மாடிகளைக் கொண்ட வகுப்பறைக்கட்டடம் (07) கல்லூரி அதிபர் திருமதி மும்தாஜ் பேகம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் பௌசி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அர்சத் நிஸாமுத்தீன் ஆகியோர்களுடன் லைட் லைப் ஸ்தாபகர் ஜெயினுலாப்தீன், எம்.எஸ்.எம். ஷாஸில், அல்ஹாஜ் யஹியா சாதீக், அப்துல் கபூர் நஸ்ருன், எம்.எஸ்.எம். ஸஹ்ரி ஆகியோர்களும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள் அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் 130ஆவது வருட பரிசளிப்பு விழா

ருசைக் பாரூக்

கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் 130ஆவது வருடாந்த பரிசளிப்பு விழா 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரி அப்துல் கபூர் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் வித்யாஜோதி வஜிர எச்.டபிள்யூ. திஸாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

2022 ஆம் ஆண்டின் சிறந்த மாணவன் பஹத் பைசால் N.D.H. அப்துல் கஃபூர் தங்கப் பதக்கம், தேசமான்ய பேராசிரியர் எம்.டி.ஏ. புர்கான் சவால் கிண்ணம் மற்றும் பிரிகேடியர் ஏ. ஆரியப்பெரும நினைவு சவால் கிண்ணம் பிரதம அதிதியிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர், வைத்திய பீடம் மற்றும் குழந்தை நல ஆலோசகர் டாக்டர் திருமதி டிவிங் திஸாநாயக்க, ஸாஹிரா கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவர் பௌசுல் ஹமீட், செயலாளர் அலவி முக்தார், பொருளாளர் எம்.எஸ்.எம். நியாஸ், பழைய மாணவர்கள் சங்க தலைவர் ஷிராஸ் நியாஸ், பிரதி அதிபர் எம்.எம். ஷாதுலி, துணை அதிபர்கள் பஸ்லின் பிர்தவுஸ், ஏ.எம். மிஹ்லார், எம். ஜே.எம். ரிஸ்கான், எம்.டி.எம். இல்ஹாம், சினத் இஸ்மாயில், பிரிவுத் தலைவர்களின், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

புத்தளம், கிராமிய அபி. நிறுவன ஏற்பாட்டில் விசேட செயலமர்வு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் , கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் எனும் தலைப்பிலான விசேட செயலமர்வொன்று நேற்று (10) இடம்பெற்றது.

கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஆர். ரிகாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் வளவாளர்களாக எஸ். நிசாதி பிரமோத்ய, ஆயிஷா பானு, ஈ.ஜே.ஜே. பவித்ரன், ரி.என். பிரகீத் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த செயலமர்வில் வயது, சமயம் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகள் பலர் கலந்துகொண்டனர். இதன்போது, எமது அடையாளங்களையும், நம்பிக்கைகளையும் , உரிமைகளையும் பின்பற்றும் போது அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றி இந்த செயலமர்வில் எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன், இலங்கையில் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கை தொடர்பான மனித உரிமைகள் தொடர்பாகவும் இலங்கை அரசியலமைப்பில் அத்தியாயம் 3 இல் குறிப்பிடப்பட்ட சில விடயங்களை முன்வைத்து அதுதொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

கொவிட் தடுப்பூசிகளை விநியோகித்த சுசித்ரா எல்லவுக்கு அதிசிறந்த விருது

சாதனைப் பெண்களை கௌரவிக்கும் நிகழ்வில் ஆளுநர் வழங்கினார்

மகளித் தினத்தை சிறப்பிக்கும் நிகழ்வுகள் அண்மையில் திருகோணமலை திருக்கோணேஸ்வரா இந்து கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் இந்தியாவின் பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட்டின் இணை நிறுவுநரும் இயக்குநருமான திருமதி சுசித்ரா எல்ல பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். கொவிட் காலத்தில் தடுப்பூசியை கண்டுபிடித்து சுமார் 600 பில்லியன் ஊசிகளை விநியோகித்த பெண்ணான இவருக்கு,"உலக அதி சக்தி வாய்ந்த பெண்" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ் விருதை ஆளுநர் வழங்கினார்.

மேலும் திருகோணமலையில் கல்வி, சலாசாரம் மற்றும் கிராமிய மட்டத்திலான சாதனைகள் படைத்த பெண்களும் பாராட்டப்பட்டனர். இந்நிகழ்வில், பிரதம செயலாளர் ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் எம்,எஸ், தௌஃபீக், ஆளுநரின் செயலாளர் எல்,பி மதநாயக்க, அரசாங்க அதிபர் உட்பட அரச உத்தியோகஸ்தர்கள் பலரும் கொண்டனர்.

கிழக்கின் குரல்

மாணவர்களின் நல்வாழ்வை மேம்படுத்த அதிகாரிகளுக்கு பயிற்சி

பாலமுனை விசேட நிருபர்

பாடசாலை மற்றும் புறச்சூழலில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு நல்வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு, இருநாள் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த 06,04 ஆகிய இரு தினங்களில் இச் செயலமர்வுகள் இடம்பெற்றன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் இது,ஏற்பாடு செய்யப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு கல்வி வலயங்களிலிருந்தும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

உதவிப் பிரதேச செயலரின் நூல் வெளியீட்டு விழா

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் றாசீத் யஹ்யாவின் (நளீமி) ஒன்பதாவது வெளியீடான "மகப்பேறின்மை, கர்ப்பம் தரிப்பதற்கான போராட்டம்" எனும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டது.

பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் (நளீமி) தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இந்நிகழ்வு (04) நடைபெற்றது.

பிரதம அதிதியாக குழந்தை நல விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ரயீஸ் முஸ்தபா கலந்து கொண்டார். நூல் ஆய்வினை முன்னாள் மீள்பார்வை ஊடக மையத்தின் தலைமை ஆசிரியர் சிறாஜ் மஸ்ஊர், நூலின் ஏற்புரையை நூலாசிரியர் உதவிப்பிரதேச செயலாளர் றாசீத் யஹ்யா ஆகியோர் நிகழ்த்தினர்.

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வருடாந்த மாநாடு கொழும்பில்

புதிய உறுப்பினர்கள் தெரிவு

பாலமுனை தினகரன் நிருபர்

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வருடாந்த மாநாடு கொழும்பு தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கட்சியின் பிரதித் தலைவர் எம். பீ. அக்பர் அலி (நாசார் ஹாஜி) தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில்

கட்சியின் செயலாளர் நாயகம் எம். ரீ. ஹசன் அலி அறிக்கையை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார். கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், கட்சியின் பொருளாளருமான கலீலுர்ரஹ்மான் கட்சியின் கணக்கு அறிக்கையை வழங்கி வைத்து அங்கத்தவர் மத்தியில் உரையாற்றினார்.

இதேவேளை கட்சியின் புதிய உயர் பீட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தவிசாளராக பஷீர் சேகுதாவூத், சிரேஷ்ட பிரதி தலைவராக ஐ. எம். என். மிப்தாத், பிரதித் தலைவர்களாக எம். பீ. அக்பர் அலி, எஸ். நிஜாமுதீன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளர் நாயகமாக எம்,ரீ. ஹசன் அலியும் பொருளாளராக ஐ. ஏ.. கலீலுர்ரஹுமானும், தேசிய அமைப்பாளராக எம். பீ. எம். சதாத்தும் மொத்தமாக 27 பேர் கொண்ட உயர் பீட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஹிஸாம், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான காதர், முஸம்மில் மற்றும் துறைமுக தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹரீப், பாயிஸ் ஆகியோர் கட்சியின் உயர் பீடத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

'ஏ.ஆர்.எம்.ஜிப்ரி ஒரு சகாப்தம்' எனும் நூல் அறிமுக நிகழ்வு அண்மையில் மாளிகைக்காடு, பாபா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் யூ.எல்.யாகூப் தலைமையில், நடைபெற்றது. சர்வதேச புகழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன் மற்றும் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். மர்ஹூம் ஏ,ஆர்,எம்.ஜிப்ரியின் உறவினர் ஒருவருக்கு சர்வதேச புகழ் அறிவிப்பாளர் நூலின் பிரதியை வழங்குகிறார்

யாழ். சண்டிலிப்பாய் பகுதியில்

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகங்கள் சுற்றிவளைப்பு

சில உணவகங்களுக்கு தண்டம்; சீல் வைப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கு, 73 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ள நீதிமன்று , குறித்த உணவகத்தையும் சீல் பண்ணுமாறு உத்தரவிட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரான செ. பிரின்சன் தலைமையில் உணவகங்களில் திடீரென மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, 180 கிலோ பழுதடைந்த ரொட்டிகள், 05 கிலோ இடியப்பம் மற்றும் 08 கிலோ பிட்டு என்பவற்றை பொலித்தீன் பைகளில் கட்டி குளிர் சாதன பெட்டிகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த உணவகத்திற்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில். உணவாக உரிமையாளருக்கு 73 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த நீதிமன்றம், உணவகத்தை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டது.

அதேவேளை பழுதடைந்த இறைச்சி மற்றும் இறால் ஆகிய வற்றை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த உணவக உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டமும், பழுதடைந்த இறைச்சி றொட்டியை விற்பனைக்கு வைத்திருந்தமை மற்றும் உணவகத்தை சுத்தமின்றி பேணிய மற்றுமொரு உணவக உரிமையாளருக்கு 33 ஆயிரம் ரூபாய் தண்டமும் நீதிமன்று விதித்துள்ளது.

மல்லாகம் நீதவான் நீதிமன்று நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட 06 பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட உணவு கையாளும் நிலையய உரிமையாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் சுமார் 03 இலட்சம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ள நிலையில் , சில உணவகங்களை சீல் வைத்து மூடுமாறும் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கின் உதயம்

காணியை உரிமம் மாற்றிய பெண்ணொருவர் கைது

யாழில் சம்பவம்

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள காணியொன்றை மோசடியாக உரிமம் மாற்றம் செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் பகுதியில் மூவருக்கு சொந்தமான காணி ஒன்றினை, ஒருவர் காலமான நிலையில், மற்றைய நபர் வெளிநாட்டில் வசித்து வந்த நிலையில் அவருக்கு தெரியாமல் மற்றையவர் தனது பெயருக்கு காணியை உரிமம் மாற்றம் செய்துள்ளார். இது தொடர்பில் அறிந்து கொண்ட நபர், தனக்கு தெரியாமல் தனக்கு சொந்தமான காணியினை உரிமம் மாற்றம் செய்து மற்றைய நபர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் என யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மோசடியான முறையில் காணி உரிமம் மாற்றம் செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவரை கைது செய்துள்ளனர்.

வெளிநாடு அனுப்புவதாக கூறி பணம் மோசடி

பெண்ணொருவர் கைது

யாழ்.விசேட நிருபர்

வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைப்பதாக 60 இலட்ச ரூபாய் பணத்தினை நபர் ஒருவரிடம் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் 27 வயதான யுவதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு பகுதியை சேர்ந்த குறித்த பெண் , யாழ்ப்பாண நகர் பகுதியை அண்மித்த பகுதியில் , வெளிநாடு செல்பவர்களுக்கான தொடர்பகம் என , வெளிநாடு செல்ல விரும்புவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கல் , விசா தொடர்பிலான தெளிவூட்டல்கள் போன்ற சேவைகளை கட்டணம் பெற்று வழங்கி வந்துள்ளார்.

அவரை நம்பி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களை சேர்ந்தவர்களும் பணத்தினை வழங்கி வந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் சுமார் 60 இலட்ச பணத்தினை வழங்கியுள்ளார்.

பணத்தினை வழங்கியவர் தனது வெளிநாட்டு, பயண ஏற்பாடுகள் தாமதமாகி வந்தமையால், அப்பெண் மீது சந்தேகம் கொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , அப்பெண்ணை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது அவரது வங்கி கணக்கு இலக்கம் ஊடாக சுமார் 4 கோடி ரூபாய்க்கும் அதிகமான பண பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளதனை கண்டு பிடித்துள்ளனர்

கொழும்பு உள்ளிட்ட இதர பகுதிகளில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் முகவர்களாக செயற்படும் மோசடியாளர்கள், யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் தமக்கான முகவர்களாக சிலரை நம்பிக்கைக்காக அமர்த்தி அவர்கள் ஊடாக பெரும் பணம் மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தொடர்பில் அனைவரும் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

ரூ. 04 இலட்சம் பெறுமதியான நகைகள் திருட்டு

சாவகச்சேரி விசேட நிருபர்

- **தொழில்சார் தகைமைகள்** — பெண் பராமரிப்பாளர் முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் அரச நிறுவனத்தினால் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற (பதிவு செய்யப்பட்ட) முன் பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தினால் சிறுவர் கல்வி மற்றும் சிறுவர் அபிவிருத்தி பற்றிய 06 மாதத்திற்கு குறையாத கால பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் (NVQ)
- **அனுபவம்** — பெண் பராமரிப்பாளருக்கு முன்பள்ளி/ பகல் நேர கண்கானிப்பாளர் பதவியில் 03 வருட அனுபவம் கையுதவியாளுக்கு அனுபவம் தேவையில்லை
- **சம்பள அளவு** — பெண் பராமரிப்பாளருக்கு - 1750.00 (அன்றாடம்) கையுதவியாளருக்கு (பெண்) ரூ. 1250.00 (அன்றாடம்)
- **கவனிக்கவும்** — மேற்படி பதவிக்காக நேர்முகத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் இச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்

செயலாளர்,
பிரதேச சபை, ஹோமாகம.

அறிவித்தல்

68/C/34, பரக்கும் மாவத்தை, யக்கல என்ற முகவரியில் அமைந்துள்ள Good People என பெயரிடப்பட்ட எம்மால் நடாத்தப்படும் அரச சார்பற்ற நிறுவனம் தனது பெயரை Children of peace என மாற்றியமை குறிப்பிடத்தக்கது.

மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப.9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை	இத் திகதி வரை மீட்கப்படாதவை	ஏல விற்பனைத் திகதி
02/12/2023	01/01/2024	25 & 26/03/2024

கிளைகள் : அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

காணி சுவீகரித்தல் சட்டம்
(அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்படி காணி சுவீகரித்தல் (திருத்த) சட்டம் இல. 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: RUW/LAN/ACQTN/A2/III-ii

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2003.03.07ஆம் திகதி 1278/19ம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் மூன்றாம் (III) பகுதியைப் பார்க்கவும்.

அட்டவணை

பிரதேச செயலாளர் பிரிவு	:	ருவன்வெல்ல
கிராமம்	:	மகாதெனிய
அமைவிடம்	:	இல. 102 எப் மகாதெனிய பிரிவு
காணியின் பெயர்	:	கஹற்றகஹ வத்தை பன்சல் வத்தை, கல் அன்த பள்ளேவத்தை சியம்பலகஹ வத்தை பரண வத்தை பில்லாவ கும்புர கல் அந்த உட சூட்வத்தை லிந் ஹேரஸ்ற் வத்தை புஸ் வெலி மன்கட மகாதெனிய வத்தை
ஆரம்ப வரைபட இல.	:	பீ.பீ.கேஈ. 2870
துண்டு இல.	:	01 இல இருந்து 40 வரை

பிரதேச செயலாளரும்,/
காணி சுவீகரித்தல் அதிகாரியும்,
பிரதேச செயலாளர்,
ருவன்வெல்ல.

The Housewives' companion
Classifieds on
Daily News

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக, பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

கேள்வி இல.	கேள்விப் பெயர்	விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்)	பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம்	மூடும் திகதி மற்றும் நேரம்
CMS/LP/24/ PT/17/005	25 Nos. Time Attendance (Face & Finger Print Devices)	60,000.00	1,000.00	2024.03.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/23/ PT/11/056	Cooler Assembly oil 3-1249T (21300-00Z01)	17,000.00	1,000.00	2024.03.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு
CMS/LP/23/ PT/17/064	1500 Mtrs of Cloth Drill for Year 2024	24,000.00	1,000.00	2024.03.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொருவெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 மார்ச் 11 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதிவரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவுமுறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமானவிலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.
தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.
தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443

விலைமனு அழைத்தல்

விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

A	B	C	D			E
தொடர் இல.	கருமங்களின் விபரம்	ஒப்பந்த இலக்கம்	வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம்			விலைமனுப் படிவக் கட்டணம்
			காசாக எனின்	வங்கி வரைவு ஒன்றெனின்	பிணையம் செல்லுபடிக் காலம்	
01	நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) பணியகத்திற்கு சொந்தமான சீதாஎலிய அரச விதை உருளைக்கிழங்கு உற்பத்தி பண்ணையின் இடிதாங்கி அமைப்பை வழங்கிப் பொருத்துதல்	SPD/2/5/4/ 04 (2024)	52,000/-	104,000/-	2024.07.17	ரூ. 3,000.00
02	விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உள்ள கந்தளாய், பொலன்னறுவை மற்றும் பரந்தன் ஆகிய அரச விதை உற்பத்தி பண்ணைகளுக்கு விதை நெல் உருவாக்கும் இயந்திரங்கள் 03ஐ கொள்வனவு செய்தல்	SPD/2/5/4/ 06 (2024)	210,000/-	420,000/-	2024.07.17	ரூ. 6,000.00
03	கன்னோருவ மரக்கறி விதை நிலையத்திற்கு தேவையான மூலேயர் அலுமினியம் கொயில் கொள்வனவு செய்தல்	SPD/2/5/4/ 01 (2024)	35,000/-	70,000/-	2024.07.03	ரூ. 2500.00

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப் படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்வாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2024.03.12 முதல் 2024.04.01 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனு சமர்ப்பிக்கும், விலைமனுதாரர்கள் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் D இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024.04.02 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,
விவசாயத் திணைக்களம், பேராதெனிய.

2024.03.11
081-2388106/122

2015 இல. 05 தேசிய ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 13ம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

1160/C குணவர்தன மாவத்த, நாவிமன தெற்கு மாத்தறையில் அமைந்துள்ள சேமினி தக்சரனி பட்டகொட ரணதுங்க ஆகிய நான் இல. 79/1, ஹக்மன வீதி, மாத்தறை முகவரியில் அமைந்துள்ள லக்சரணி பார்மசி எனும் மருந்தகத்தின் ஊழியரான நான் மேற்படி மருந்தகத்தில் அனுமதிப் பத்திரமின்றி மருந்துகளை விற்ற குற்றச்சாட்டுக்கு வழக்கு இல. 93604 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கில் நான் குற்றவாளி ஆக்கப்பட்டதால் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் ரூ. 25000/- தண்டம் விதிக்கப்பட்டதாகவும் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

இக்குற்றமானது என்னால் மீண்டும் இழைக்கப்படமாட்டாது என தெரிவிப்பதுடன் மேற்கண்ட குற்றம் சம்பந்தமாக முழு இலங்கை மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

மகளிர் கல்லூரி கொழும்பு 7

மகளிர் கல்லூரி என்பது இலங்கையின் கல்வி அமைச்சின் கீழ் உள்ள ஒரு தனியார் பள்ளியாகும்.

எங்கள் பள்ளியில் 60 வயதுக்குட்பட்ட செயலில் உள்ள நபர்களுக்கான பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. விளையாட்டு மைதான பராமரிப்பு - ஆதரவு பணியாளர்கள்
2. வகுப்பறை பராமரிப்பு - ஆதரவு பணியாளர் ஆண்/பெண்

உங்கள் விண்ணப்பத்தை 31 மார்ச் 2024 அன்று அல்லது அதற்கு முன் கீழே உள்ள முகவரிக்கு அனுப்பவும்.

மனிதவளத் துறை,
மகளிர் கல்லூரி,
இலக்கம் 66,சேர் ஏர்னஸ்ட் டி சில்வா
மாவத்தை, கொழும்பு 7.

பனை அபிவிருத்தி சபை
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

வெற்றிடங்கள்

பனை அபிவிருத்தி சபையின் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உள்ளகக்கணக்காய்வாளர் பதவி MM 1-1 (01 வெற்றிடம்)

தகைமைகள்

வெளியக ஆட்சேர்ப்பு:

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அரச முகாமைத்துவம் / நிதி வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / விவசாயம் / விஞ்ஞானம் / சட்டம் பற்றிய அடிப்படை பட்டப்படிப்பினை கொண்டிருத்தல் அத்துடன் கூட்டுத்தாபனம், சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் (03) வருட காலத்திற்கான முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல்.

உள்ளக ஆட்சேர்ப்பு:

பதவிக்குரிய பாடத்துறையினுள் கனிஷ்ட முகாமைத்துவ வகையின் முதல் தர பதவியில் ஆகக்குறைந்தது (05) வருட சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது:

22 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவர்கள். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லைகள் கிடையாது.

சம்பள வகை: MM 1-1

சம்பள அளவு: 2016 ரூ. (53,175-10x1,375-15x1,910-95,575/-)

பொது:

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் நல்ல உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை கொண்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் தனது வேலைத்தளமாக தலைமைக்காரியாலமான யாழ்ப்பாணத்தில் கடமையாற்றவேண்டும்.

விண்ணப்பதாரிகளது சுயவிபரக் கோவை, பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் முன்னனுபவம் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய கையொப்பத்துடனான விண்ணப்பம், தமது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். தற்போது அரச சேவை / கூட்டுத்தாபனம் / சபை போன்றவற்றில் பணியாற்றுபவர்கள் தங்களது விண்ணப்பத்தினை தமது நிறுவக தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் **2024.03.25** அல்லது அதற்கு முன்னர் **" தலைவர், பனை அபிவிருத்தி சபை, இல.498, காலி வீதி, கொழும்பு 06 "** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்ப வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறித்துரைக்கப்படாத விடயங்கள் ஏதுமிருப்பின், அவை தொடர்பில் ஆட்சேர்ப்பு அதிகாரம் பெற்றோர் தீர்மானிப்பர். எந்த வகையிலும் நேர்மையற்ற விதத்தில் பதவியைப் பெற முயற்சிப்போரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

தலைவர்,
பனை அபிவிருத்தி சபை,
இல.498, காலி வீதி,
கொழும்பு 06.

SELACINE

வாகன விற்பனை

மூன்று சக்கர வாகனம்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
ABL-5398	பஜாஜ்	2016	பாணடுரா
AAZ-6028	பஜாஜ்	2015	பாணடுரா
ABC-9875	பஜாஜ்	2015	ராகம
AAW-4942	பஜாஜ்	2015	நுவரேலியா
ABA-3007	பஜாஜ்	2015	கண்டி
AAW-9316	பஜாஜ்	2015	ராகம
ABC-8839	பஜாஜ்	2015	குருநாகல்
ABC-6578	பஜாஜ்	2015	ராகம
ABE-5560	பியாஜியோ	2015	ரத்தினபுரி
AAY-7780	பியாஜியோ	2015	ராகம
AAQ-9922	பஜாஜ்	2014	பாணடுரா
AAR-8870	பஜாஜ்	2014	ராகம
AAH-6102	பஜாஜ்	2013	கண்டி
AAN-2541	பஜாஜ்	2013	ராகம
AAB-6575	பஜாஜ்	2012	ராகம
YY-0961	பஜாஜ்	2012	மாதரா
AAB-1220	பஜாஜ்	2012	எம்பிலிபிட்டிய
YX-7313	பஜாஜ்	2012	ராகம
YW-9784	பஜாஜ்	2012	பாணடுரா
YU-0902	பஜாஜ்	2011	ரத்தினபுரி
YT-4776	பஜாஜ்	2011	மாதரா
YP-5544	பஜாஜ்	2011	ராகம
YV-7590	பஜாஜ்	2011	ராகம
YO-3146	டி.வி.எஸ்	2011	ராகம
YL-8644	பஜாஜ்	2011	ராகம
YQ-3173	பஜாஜ்	2011	மாதரா
YC-3782	பஜாஜ்	2010	ராகம
QZ-9075	பஜாஜ்	2010	ராகம
YG-8844	பஜாஜ்	2010	ராகம
YA-6892	பஜாஜ்	2010	ரத்தினபுரி
QX-5130	பஜாஜ்	2010	ராகம
YF-9758	பஜாஜ்	2010	பாணடுரா
QT-5675	பஜாஜ்	2009	ராகம
QS-7843	பஜாஜ்	2009	ராகம
QO-5278	பஜாஜ்	2008	ராகம
QM-3317	பஜாஜ்	2007	ராகம
QA-5490	பஜாஜ்	2005	ராகம

மோட்டார் வாகனம்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
CAV-2776	சுசுகி	2017	குருநாகல்
CBC-1315	சுசுகி	2017	ராகம
KO-7981	டாடா	2011	ராகம
64-9487	டொயோட்டா	1993	ராகம
32 SRI 5370	தைஹட்சு	1985	ராகம
15 SRI 1685	மிட்சுபிஷி	1984	ராகம

மோட்டார லாரி	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
LH-2823	டாடா	2010	சிலாவ்
GR-0327	மிட்சுபிஷி	1999	ராகம
226-9596	நிசான்	1993	ராகம
41-8505	ISUZU	1982	குருநாகல்

டூயல் பர்போஸ் கேப்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
PX-4738	மஹிந்திரா	2013	ராகம
PV-7754	மஹிந்திரா	2013	சிலாவ்
PQ-4845	டாடா	2011	ராகம

ஓற்றை வண்டி	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
PY-9964	மஹிந்திரா	2014	ராகம

டூயல் பர்போஸ் வாகனம்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
56-1372	ISUZU	1994	பாணடுரா
59-1983	நிசான்	1991	ராகம
52-4427	நிசான்	1987	ராகம
50 SRI 7806	நிசான்	1983	ராகம
50 SRI 5074	டொயோட்டா	1983	ராகம
50 SRI 5119	டொயோட்டா	1982	கண்டி

ஜீப்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
KX-2266	KIA	2012	ராகம

டிராக்டர் 4 வீலர்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
RC-6730	மஹிந்திரா	2011	அனுராதபுரம்

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0778 523 285
திருகோணமலை 0773 382 612
ரத்தினபுரி 0774 857 351
கண்டி 0773 972 860
நுவரெலியா 0777 717 562
அனுராதபுரம் 0767 139 916
அம்பாரா 0773 547 556
குருநாகல் 0764 425 205
எம்பிலிபிட்டிய 0773 610 188
பாணடுரா 0775 215 263
மாத்தறை 0743 601 121
சிலாவ் 0770 288 804

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்

உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் (ஊவா மாகாணம்) சார்பில் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் ''1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 03" இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், மொத்த மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால் மட்டும் (இல. ரூபா 5,000,000.00) இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர் அந்தச் சட்டத்தின் 11வது பிரிவின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)
4. விலைக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
6. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையின் 5ஆம் பிரிவில் (விலைக்கோரல் தரவு / ஒப்பந்த தரவு) வழங்கப்பட்டுள்ளன.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அட்டவணையில் பட்டியலிடப்பட்ட அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் / செயலாளர் அவர்களிடமிருந்து வாரநாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை பெற்றுக்கொள்ளலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் அல்லது ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு 11-03-2024ஆம் திகதி முதல் 31-03-2024ஆம் திகதி வரை 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை மீளளிக்கப்படாத 7500.00 கட்டணத்தைச் செலுத்தி ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
9. 01-04-2024ஆம் திகதி 10.00 மணித்தியாலயம் அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
10. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சகல விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. 21-03-2024ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.

உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர்	ஒப்பந்த இல.	வேலை விபரங்கள்	மதிப்பீட்டுக் கிரயச் செலவு (இல.ரூ. மில்லியன்)	ஒப்பந்தக் காலம்	தேவையான தரம்	விலைக் கோரல் பிணைத் தொகை (ரூபா)	விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம்	விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம்
ஹப்புத்தளை பிரதேச சபை	LDSP/UP/BD/ HPS/W/2024/2	உள்நாட்டு விதைகள், இயற்கை உரங்கள், விவசாயம் மற்றும் பூஞ்சைக் கொல்லி விற்பனைக்கான நிலையத்தை நிர்மாணித்தல்	28.36	150 நாட்கள்	C6, C5 மற்றும் C4 கட்டிடங்கள்	284,000.00	25.08.2024	உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை. 0552222407 அல்லது இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனம்
கந்தகெட்டிய பிரதேச சபை	LDSP/UP/BD/ KKPS/W/2024/1	கந்தகெட்டியவில் புதிய வர்த்தக கட்டிடத்தை நிர்மாணித்தல்	19.59	150 நாட்கள்	C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள்	196,000.00	24.06.2024	
லுணுகல பிரதேச சபை	LDSP/UP/BD/ LPS/W/2024/2	லுணுகல பலநோக்குக் கட்டிடத்தை மேம்படுத்துதல்	4.56	90 நாட்கள்	C9, C8 மற்றும் C7 கட்டிடங்கள்	46,000.00	10.06.2024	
மீகஹகிவுல பிரதேச சபை	LDSP/UP/BD/ MGPS/W/2024/1	மீகஹகிவுல பலநோக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - 1ஆம் படிநிலை மற்றும் 2ஆம் படிநிலை	44.365	150 நாட்கள்	C6, C5 மற்றும் C4 கட்டிடங்கள்	444,000.00	05.08.2024	
ஊவா பரணகம பிரதேச சபை	LDSP/UP/BD/ UPPS/W/2024/2	அம்பகஸ்தோவ மாநாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல்	27.23	150 நாட்கள்	C6, C5 மற்றும் C4 கட்டிடங்கள்	273,000.00	05.08.2024	
மொனராகலை பிரதேச சபை	LDSP/UP/MO/ MOPS/W/2024/2	மொனராகலை பிரதேச சபை முன்பள்ளியில் உள்ள பகல் நேர காப்பகத் திட்டத்தின் தொடர்ச்சியான மிகுதி வேலைகள் - PT 1 மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல்	12.748	120 நாட்கள்	C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள்	128,000.00	29.04.2024	

பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,
உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),
செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,
உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்.
0552222407

11-03-2024

தென் மாகாண சபை
தென் மாகாண பிரதம செயலகம்
கேள்விக்கான அழைப்பு

கணனி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் தென் மாகாண பிரதம செயலகத்தின் கேள்விச் சபையின் தலைவரால் கீழ்க்காணும் அலுவலக உபகரணங்களை வழங்குவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி இலக்கம்	விபரம்	அளவு	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா)	கேள்விப் பிணை முறி (ரூபா)
SP/CS/ NCB/24/02	Desktop Computers with UPS (DOS/ Ubuntu OS)	11	2500.00	75000.00
	Desktop Computers with UPS (Factory Loaded Windows 11 Prof OS With Virus Guard)	11		
	Laptop Computer	01		

(தொழில்நுட்ப மாதிரி மற்றும் விபரங்கள் கேள்விப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன)

02. இதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற நிறுவனங்களுக்கு தென் மாகாண பிரதம செயலாளருக்கு எழுத்து மூலம் வேண்டுதலைச் சமர்ப்பித்து, 2024 ஏப்ரல் 01 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை, மீளளிக்கப்படாத ரூ.2500.00 கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி காலி, எஸ்.எச். தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தென் மாகாண பிரதம செயலகத்தில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

03. ரூ.75000.00 பெறுமதியான 2024.07.01 வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்ட எந்த வங்கியில் இருந்தும் தென் மாகாண பிரதம செயலாளரின் பெயருக்கு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது, பிரதம செயலகத்தின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்னர் வழங்கப்படும் காசுப் பற்றுச்சீட்டை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசு, காசோலைகள் அல்லது வங்கிப் பிணைமுறியாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி நிராகரிக்கப்படும்.

04. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024 ஏப்ரல் 02 பி.ப. 2.30 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, தென் மாகாண பிரதம செயலகம், எஸ்.எச்.தஹநாயக்க மாவத்தை, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து தென் மாகாண பிரதம செயலகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு, கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

05. விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் (SP/CS/NCB/24/02) மற்றும் கணனி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் ஸ்தாபித்தல் சார்பாக குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் திறத்தல் 2024 ஏப்ரல் 02 பி.ப. 2.30 இற்கு விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் பிரதம செயலகத்தில் இடம்பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதைக் கவனியுங்கள்.

கவனிக்கவும் : கேள்வி அறிவித்தல் தென் மாகாண பிரதம செயலகத்தின் www.cs.sp.gov.lk இணையதளத்தில் காண்பிக்கப்படும்.

சுமித் அலஹகோன்
பிரதம செயலாளர்/ தலைவர் பெறுகைக் குழு,
பிரதம செயலகம்,
தென் மாகாணம்,
தொ.பே. இலக்கம் : 091 - 4944016 / 0914946368
ஈமெயில் : procurementplan@gmail.com
திகதி : 2024.03.11

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை
விலைமனுக்களுக்கான அழைத்தல்

கீழே விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (மேல் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

அட்டவணை 01

விலைமனு இல.	செயற்றிட்டப் பெயர்	பெசேவ நீங்கலாக மதிப்பீட்டு ஆகுசெலவு	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்)	விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்)	ஒப்பந்தக் காலம் (நாட்களில்)	தகுதியுள்ள CIDA பதிவுத் தரம்	விலைமனுப் பிணை செல்லுபடியாகும் காலம்
1.	அளவ்வவில் உத்தேசிக்கப்பட்ட வாகன நிறுத்துமிடம் மற்றும் பாதசாரிக் கடவையின் மேம்படுத்தல் (II ஆம் கட்டம்) PD/UDA/DPC/ ALAWWA/11/2024	73,400,000	16,000 மற்றும் வரிகள்	734,000	270 நாட்கள்	கட்டிட/ வீதி நிருமாண வேலைகளின் விஷேடத்துவத்துடனான சி-3 மற்றும் சி-4	2024.07.30 ஆம் திகதி வரையும்

01. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடாத்தப்படும்.

02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள ஏனைய தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகைத் தலைவரிடமிருந்து பெற்று 2024 மார்ச் 11 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 01 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் பெறுகை அலுவலகத்தின் தலைவரிடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

04. 2024 மார்ச் 11ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 01ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மேலேயுள்ள 01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகின் பெறுகைத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவரினால் கொள்வனவு செய்யப்படலாம்.

05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதுமானதும் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறான வங்கி உத்தரவாத பாங்கில் விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையங்கள் மற்றும் விலைமனுப் பிணையங்களின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 01 ஆம் அட்டவணையில் கூறப்பட்டிருப்பதுடன் அவைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

06. ஒவ்வொரு விலைமனுவும் தனித்தனியான தபாலுறைகளில் இரு பிரதிகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்), பெறுகை அலகு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 7 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல என முகவரியிடப்பட்டு 2024 ஏப்ரல் 02 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளிப்பதற்கு நியமிக்கப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

07. பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகில் 2024 மார்ச் 22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக் கூட்டமானது நடைபெறும். அனைத்து விலைமனுதாரர்களும் இந்த கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

08. விலைமனுதாரர்களை தெரிவு செய்தலில் விலைமனுதாரரின் முன்னைய செயற்பாடு மற்றும் திரவச் சொத்து நிலைமை ஆகியன கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்படும். தரம் குறைந்தளவில் செயற்பாட்டை மேற்கொண்ட விலைமனுதாரர் எந்தவொரு விலைமனுவையும் வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட மாட்டார்கள்.

09. எந்தவொரு விலைமனுக்களையும் தயாரித்தல் தொடர்பான ஆகுசெலவிற்கான எந்தவொரு பொறுப்பையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ள மாட்டாது. திணைக்கள பெறுகைக் குழுவானது (மேல் மட்டம்) பெற்றுக் கொண்ட விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவொன்றை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. திணைக்கள பெறுகைக் குழுவின் (மேல் மட்டம்) தீர்மானமே இறுதியானதாகும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (மேல் மட்டம்),
நகர அபிவிருத்தி அதிகாரசபை,
07 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', I ஆம் கட்டம்,
பத்தரமுல்ல.

ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு

ஊவா மாகாணத்தின், மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு I (அ) தரத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2024

ஊவா மாகாண சபையின் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூல பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் கோரப்படும் வெற்றிடமாயுள்ள பாடங்கள்

	பாடங்கள்	மொழி மூலம்	
		சிங்களம்	தமிழ்
1	பௌதிகவியல்	-	✓
2	தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்	✓	-
3	உள்ளக ஆக்க வெளிப்பாடு	✓	-
4	சிறுவர் மனநலம் மற்றும் பாதுகாப்பு	-	✓
5	சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு	-	✓
6	பிரயோக பூங்கா விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வி	✓	-
7	மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி	✓	-
8	மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி	✓	-
9	கைத்தறி மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி	✓	-
10	அலுமினிய ஆக்க தொழில்நுட்பக் கல்வி	✓	-
11	உற்பத்தி	✓	-
12	விசேட கல்வி	✓	✓

கல்வித் தகைமைகள்:
இல.1885/38 மற்றும் 2014.10.23 திகதிய இலங்கை ஆசிரியர் சேவை யாப்புக் கோவையின் 7.2.2.1 பிரிவின் குறிப்பு 6இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் க.பொ.த. (சா/தரம்) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியை பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் மற்றும் விண்ணப்பிக்கும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட பட்டத்தை பூர்த்தி செய்திருத்தல்.

வயது:
விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு அதாவது 2024.03.28ம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாது மற்றும் 35 வயதிற்கு மேற்டாது இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2024.03.28

விண்ணப்பங்கள் கோருவதுடன் சம்பந்தப்பட்ட விவரமான அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் psc.up.gov.l.k இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 055-2231460

2024.03.11ம் திகதி
ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு
இல. 14/4, பிலிபொத்தகம வீதி,
பிங்அராவ, பதுளை.

(எச்.எம். ஜீவந்த ஹேரத்),
செயலாளர்,
ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு.

EASTERN UNIVERSITY, SRI LANKA

Invitation for Bids (IFB)
National Competitive Bidding (NCB)

Rehabilitation and Improvement of Building and other Structures at Eastern University, Sri Lanka

The Chairman, Department Procurement Committee, on behalf of the Eastern University, Sri Lanka will receive sealed bids from interested eligible and qualified bidders for the works mentioned in the table given below and receiving will be closed at 2.00 pm. on 01.04.2024. Bidding documents shall be obtained from Assistant Registrar (Capital Works & Planning) in person or by sending a request to **dr_capitalworks@esn.ac.lk** up to 3.00 p.m. on 28.03.2024. The non-refundable tender fee as mentioned in table below shall be credited to the Account No: 227100140000024 in the People's Bank in favour of "Bursar, Eastern University, Sri Lanka" or online at ***http://pay.esn.ac.lk/.***

Name of Work	Estimated Cost Excl. VAT (Rs)	Required ICTAD/ CIDA Valid Grade and the Specialty	Bid Validity Period	Bid Security (Rs)	Bid Security valid up to (105 days)	Non-refundable Tender Fee (Rs)
Renovation and improvement of Building at 209, Bar Road, Batticaloa, Eastern University, Sri Lanka.	10,156,769.60	C5, C6, C7, C8 and C9 Building	77 days	150,000.00	14.07.2024	5,000.00

1. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method. Since the total cost Estimate of this Procurement is below Rs. 50 Mn, regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No.04/2016(ii)
2. Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka in terms of the Public Contracts Act No. 03 of 1987. The Original Certificate of Registration (PCA 03) shall be submitted with the bid. Contract shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate.
3. Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the format included in the Bidding document
   - in favor of **Vice-Chancellor, Eastern University, Sri Lanka**
   - amount and validity period as mentioned above
   - issued by a commercial bank operating in Sri Lanka and approved by the Central Bank of Sri Lanka
4. Sealed Bids shall be delivered to the address given below. Bids received after the closing time and date will be rejected.

   Bids to be delivered to: **The Chairman**
   Department Procurement Committee
   Eastern University, Sri Lanka
   Vantharumoolai, Chenkalady.
5. Bids will be opened immediately after the closing time at the above address.
6. Bidders or their authorized representatives are allowed to be present at the opening of Bids.
7. Interested bidders may obtain further information from Assistant Registrar (CW&P) on 065-2240589, and Works Engineer on 065-2240582 of Eastern University, Sri Lanka at Chenkalady during any working day from 9.00 hrs to 14.00 hrs.
8. Pre-Bid meeting will be held on 28.03.2024 at 10.00 am at the office of the Assistant Registrar/Capital Works and Planning of the Eastern University, Sri Lanka.

The Chairman
Department Procurement Committee
Eastern University, Sri Lanka
Vantharumoolai,
Chenkalady.
09.03.2024

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

பங்களாதேஷுக்கு எதிரான:

இலங்கை டெஸ்ட் குழாத்தில் புதுமுக வீரராக நிஷான் பீரிஸ்: ஒருநாள் குழாமும் அறிவிப்பு

பங்களாதேஷுக்கு எதிரான 16 பேர் கொண்ட இலங்கை ஒருநாள் குழத்தில் இரு முக்கிய மாற்றங்களாக லஹிரு குமார அழைக்கப்பட்டிருப்பதோடு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க அணிக்கு திரும்பியுள்ளார். அதேபோன்று பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் குழாத்தில் புதுமுக சுழற்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் அழைக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான டி20 தொடரை 21 என கைப்பற்றிய இலங்கை அணி அடுத்து மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இதன் முதல் போட்டி எதிர்வரும் புதன்கிழமை (13) சிட்டோக்ராமில் நடைபெறும்.

இதில் உபாதைக்கு உள்ளான அசித்த பெர்னாண்டோவுக்கு பதில் லஹிர குமார அணிக்கு திரும்பியுள்ளார். கடைசியாக ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் ஆடிய லஹிரு, உபாதைக்கு உள்ளாகி இருந்தார்.

அதேபோன்று ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இரட்டைச் சதம் பெற்ற நிலையில் காயத்துக்கு உள்ளான ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். இது அணியின் துடுப்பாட்ட வரிசையை பலப்படுத்துவதாக உள்ளது. ஷெவோன் டானியலுக்கு பதில் கமிந்து மெண்டிஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள் குழாம்: குசல் மெண்டிஸ் (தலைவர்), சரித் அசலங்க (உப தலைவர்), பத்தும் நிசங்க, அவிஷ்க

பெர்னாண்டோ, சதீர சமரவிக்ரம, ஜனித் லியனகே, வனிந்து ஹசரங்க, கமிந்து மெண்டிஸ், துனித் வெள்ளலாகே, பிரமோத் மதுஷான், லஹிரு குமார, மஹீஷ் தீக்ஷன, டில்ஷான் மதுஷங்க, அகில தனஞ்சய, சஹன் ஆரச்சிகே, சாமிக்க கருணாரத்ன.

இதேவேளை எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி சில்ஹட்டில் ஆரம்பமாகவுள்ள பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழாத்துக்கு புதுமுக வீரராக ஓப் சுழற்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் அழைக்கப்பட்டுள்ளார்.

சுழற்பந்து முகாமை பலப்படுத்தும் வகையில் வேகப்பந்து வீச்சாளர் மிலான் ரத்னாயக்கவுக்கு பதிலாகவே 26 வயதான நிஷான் பீரிஸ் மேலதிக சுழற்பந்து வீச்சாளராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அண்மையில் நடந்த ஆப்கானுக்கு எதிரான டெஸ்ட் குழாத்தில் இலங்கை அணியின் ஐந்து வேகப்பந்து வீச்சாளர்களுடன் இரு சுழற்பந்து வீச்சாளர்கள் இணைக்கப்பட்டிருந்தனர்.

தேசிய சுப்பர் லீக் 4 நாள் போட்டித் தொடரில் கொழும்பு அணிக்காக இரு முறை ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியது உட்பட முதல்தர போட்டிகளில் 3 ஆட்டங்களில் 20 விக்கெட்டுகளை வீழ்த்தி திறமையை வெளிப்படுத்தியதை அடுத்தே பீரிஸுக்கு இலங்கை டெஸ்ட் குழாத்தில் இடம் கிடைத்துள்ளது.

இதற்கு முன்னர் 2018 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அகில தனஞ்சயவின் பந்துவீச்சு பாணியில் சந்தேகம் எழுந்ததை அடுத்து பீரிஸ் இலங்கை குழாத்துக்கு அழைக்கப்பட்டபோதும் தனது கன்னி டெஸ்டில் ஆடும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அதேபோன்று காயத்துக்கு உள்ளாகி இருக்கும் அசித்த பெர்னாண்டோவுக்கு பதில் இலங்கை டெஸ்ட் குழாத்திலும் லஹிரு குமார சேர்க்கப்பட்டுள்ளார். இதுவரை 26 டெஸ்ட் போட்டிகளில் 74 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கும் லஹிரு குமார கடைசியாக இங்கிலாந்துக்கு எதிராக கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடந்த போட்டியில் ஆடி இருந்தார். அவரது வருகை விஷ்வ பெர்னாண்டோ, கசுன் ராஜித்த மற்றும் சாமிக்க குணசேகரவுடன் இலங்கையின் வேகப்பந்து முகாமை பலப்படுத்தும்.

துடுப்பாட்டத்தில் சோபித்து வருகின்றபோதும் பணிச் சுமையை குறைக்கும் வகையில் பத்தும் நிசங்க டெஸ்ட் குழாத்தில் சேர்க்கப்படவில்லை.

டெஸ்ட் குழாம்: தனஞ்சய டி சில்வா (தலைவர்), குசல் மெண்டிஸ் (உப தலைவர்), திமுத் கருணாரத்ன, நிஷான் மதுஷங்க, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், சதீர சமரவிக்ரம, ரமேஷ் மெண்டிஸ், லஹிரு குமார, விஷ்வ பெர்னாண்டோ, கசுன் ராஜித்த, கமிந்து மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய, லஹிரு உதார, சாமிக்க குணசேகர, நிஷான் பீரிஸ்.

145ஆவது நீலங்களின் பெருஞ்சமர் கடந்த சனிக்கிழமை (09) எஸ்.எஸ்.சி. மைதானத்தில் சமநிலையில் முடிவடைந்த நிலையில் புனித தோமஸ் கல்லூரி அணித்தலைவர் மஹித் பெரேரா (இடது), மற்றும் றோயல் கல்லூரி அணித்தலைவர் சினெத் ஜயவர்தன ஆகியோரிடம் கௌரவ. டீ. எஸ். சேனநாயக்க ஞாபகார்த்த கேடயத்தை புனத தோமஸ் கல்லூரி அதிபர் வண. மார்க் பில்லிமோரியா மற்றும் றோயல் கல்லூரி அதிபர் திலக் வத்துஹேவ ஆகியோர், கலாநிதி. ஹான்ஸ் விஜயசூரிய ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட்டின் குழும நிர்வாக பணிப்பாளர் மற்றும் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி (இடது) மற்றும் சுபுன் வீரசிங்க டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் பணிப்பாளர்/ குழும பிரதம நிறைவேற்று அதிகாரி (வலது) முன்னிலையில் வழங்கி வைத்தனர்.

டைம் அவுட் கொண்டாட்டம்:

பங்களாதேஷ் அணித் தலைவர் இலங்கை அணிக்கு கோரிக்கை

பங்களாதேஷுக்கு எதிரான டி20 தொடரை கைப்பற்றிய இலங்கை வீரர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் சர்ச்சைக்குரிய 'டைம் அவுட்' சமிக்ஞையை காண்பித்த நிலையில், அதனை கைவிடும்படி பங்களாதேஷ் அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷான்டோ கேட்டுள்ளார்.

'அவர்கள் டைம் அவுட் சம்பவத்தில் இருந்து இன்னும் வெளியேறவில்லை. அவர்கள் அதில் இருந்து வெளியேறி நிகழ்காலத்துக்கு வர வேண்டும்' என்று ஷான்டோ கூறியதாக கிரிக்கின்போ இணையதளம் குறிப்பிட்டது. என்றாலும் நாம் எமது பாணியில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டோம் என்று இலங்கை அணி வீரர் குசல் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த உலகக் கிண்ணத்தில் அஞ்சலோ மத்தியூஸுக்கு எதிராக பங்களாதேஷ் அணி டைம் அவுட் முறையில் அட்டமிழப்பு பெற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

சர்வதேச செய்திகள்

பாக். ஜனாதிபதியாக மிண்டும் ஆசிப் அலி

பாகிஸ்தானின் ஜனாதிபதியாக ஆஸிப் அலி சர்தாரி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் அவருக்கு ஆதரவாக 411 வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் ஆதரவுபெற்ற வேட்பாளர் மஹ்மூத் கான் 181 வாக்குகளைப் பெற்றார்.

நாட்டை முன்னெடுத்துச் செல்ல அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து செயல்பட வேண்டும் என்று சர்தாரி கேட்டுக்கொண்டார்.

பாகிஸ்தானின் 14ஆவது ஜனாதிபதியாக அவர் பொறுப்பேற்கவுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாசீர் புட்டோவின் கணவரான அவர் ஜனாதிபதியாவது இது இரண்டாவது முறை. 11 ஆண்டுகளுக்குப் பின் அவர் மீண்டும் ஜனாதிபதியாக பொறுப்பேற்கிறார்.

உலக அழகியாக பிஸ்கோவா தெரிவு

இந்தியாவில் நடந்த 71 ஆவது உலக அழகி போட்டியில் செக் குடியரசைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா உலக அழகி பட்டத்தை வென்றார். அவருக்கு 2022 ஆம் ஆண்டு உலக அழகியான போலந்தின் கரோலினா மகுடம் சூட்டி வாழ்த்து தெரிவித்தார்.

மும்பையில் நேற்று முன்தினம் (09) நிறைவடை உலக அழகிப் போட்டிகளில் 115 நாடுகளின் அழகிகள் போட்டியிட்டனர். 14 பேர் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற நிலையில் லெபனான் நாட்டைச் சேர்ந்த யாஸ்மினா ஜெய்டவுன் இரண்டாம் இடம் பிடித்தார்.

பட்டம் வென்ற 24 வயதாகும் கிறிஸ்டினா, மொடலாக இருந்து கொண்டே, சட்டம் மற்றும் வணிக நிர்வாகம் ஆகிய இரண்டிலும் பட்டப்படிப்பை கற்று வருகிறார்.

காசா உயிரிழப்பு 31,000ஐ தாண்டியது: பேச்சுவார்த்தை இழுபறியுடன் நீடிப்பு

காசாவில் தற்காலிக துறைமுகம் அமைக்க அமெரிக்க கப்பல் பயணம்

காசாவில் 156 ஆவது நாளாகவும் நேற்றும் (10) இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்த நிலையில் அங்கு உயிரிழப்பு 31 ஆயிரத்தை தாண்டியுள்ளதோடு போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சிகளும் இழுபறியுடன் நீடித்து வருகிறது.

அங்கு மனிதாபிமான நெருக்கடியும் மோசமடைந்திருக்கும் சூழலில் காசா காசா கரையில் தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான உபகரணங்களை ஏற்றிய அமெரிக்க இராணுவ கப்பல் ஒன்று மத்திய கிழக்கை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளது.

உதவிக் கப்பலான ஜெனரல் பிரான்க் எஸ். பெசோன், விர்ஜினிய மாநிலத்தில் உள்ள இராணுவத் தளம் ஒன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை பயணத்தை ஆரம்பித்துள்ளது. காசாவுக்கு கடல் வழியாக உதவிகளை விநியோகிக்க மிதக்கும் துறைமுகம் ஒன்றை கட்டப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்த நிலையிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காசாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழப்போர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில் அங்கு பஞ்சம் ஒன்று ஏற்படுவது தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது என்று ஐ.நா எச்சரித்துள்ளது. இதில் உதவிகள் செல்லாது அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு காசாவில் பச்சிளம் குழந்தை ஒன்றும் இளம் பெண் ஒருவரும் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்திருக்கும் நிலையில் அங்கு பட்டினிச்சாவு 25 ஆக உயர்ந்துள்ளது.

காசாவுக்கு தரைவழியாக உதவிகள் செல்வதை இஸ்ரேல் தடுத்து வரும் சூழலில் இந்தப் பகுதிக்கு தரை மற்றும் வான் வழியாக உதவிகளை விநியோகிப்பது அபாயகரமாக மாறியுள்ளது. உதவி வாகனங்கள் மீது துப்பாக்கிச் சூடு மற்றும் கொள்ளைகள் இடம்பெற்ற நிலையில் உலக உணவுத் திட்டம் உதவி விநியோகத்தை நிறுத்தியுள்ளது. வானில் இருந்து போட்ட உதவிகளில் பாராசூட் சரியாக இயங்காத நிலையில் உதவிப் போதிகள் மேலே விழுந்து கடந்த வெள்ளிக்கிழமை ஐந்து பேர் உயிரிழந்ததாக காசாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் 1,000 அமெரிக்கத் துருப்புகளின் உதவியோடு காசாவில் தற்காலிக முகாம் ஒன்றை கட்டுவதற்கு 60 நாட்கள் வரை எடுத்துக்கொள்ளும் என்றும் காசா கரைக்கு அந்தத் துருப்புகள் கால் வைக்காது என்றும் அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகன் குறிப்பிட்டுள்ளது.

எனினும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் காசா மக்களுக்கு அத்தனை காலம் காத்திருக்க முடியாது என்று அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேநேரம் சுமார் 200 தொன் உதவிகளை ஏற்றிய கப்பல் ஒன்று சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்க அனுமதிக்காக காத்துள்ளது. கடல்வழியாக காசாவுக்கு உதவிகளை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த அறிவிப்பை அடுத்து தயார்படுத்தப்பட்ட இந்தக் கப்பல் இன்று (11) பயணத்தை ஆரம்பிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்பெயின் தொண்டு நிறுவனத்திற்கு சொந்தமான இந்தக் கப்பலில் அமெரிக்க தொண்டு நிறுவனம் வழங்கிய உதவிகள் அடங்குகின்றன. எனினும் அமெரிக்காவின் தற்காலிக துறைமுகம் இன்னும் தயாராகாத சூழலில் இந்த கப்பல் துறைமுகம் ஒன்று இல்லாத காசாவில் எவ்வாறு கரையொதுங்கும் என்ற கேள்வி நீடித்து வருகிறது.

தொடர்ந்து நம்பிக்கை

மறுபுறம் முஸ்லிம்களின் ரமழான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகள் சாத்தியமில்லாத நிலையை எட்டி இருக்கும் சூழலில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையே உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட் கடந்த சனிக்கிழமை கூறியிருந்தது. மொசாட் தலைவர் டேவிட் பார்னி கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. பணிப்பாளர் வில்லியம் பர்ன்ஸை சந்தித்திருந்தார். இந்நிலையில் பர்ன்ஸ் தொடர்ந்தும் பிராந்தியத்தில் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பைடன் குறிப்பிட்டுள்ளார்.

'இடைவெளிகளை குறைத்து உடன்படிக்கைகளை எட்டும் முயற்சியாக மத்தியஸ்தர்களுடன் எப்போதும் தொடர்புகொண்டு மற்றும் ஒத்துழைப்புடன் செயற்படுகிறோம்' என்று மொசாட் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் வார இறுதி பேச்சுவார்த்தைக்காக மீண்டும் ஒரு முறை தமது குழுவின் பிரதிநிதிகள் கெய்ரோ செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்று ஹமாஸ் வட்டாரம் ஒன்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளது. கடந்த ஜனவரி தொடக்கம் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகளுக்கு எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிக்கின்றன. கடைசியாக கடந்த நவம்பரில் ஒரு வார போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்டபோது ஹமாஸ் பிடியில் இருந்த 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதோடு இஸ்ரேல் சிறையில் இருக்கும் அதன் மூன்று மடங்கான பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்திருந்தது.

எனினும் போரை முடிவுக்குக் கொண்டவருவது அல்லது காசாவில் இருந்து தமது துருப்புகளை வாபஸ் பெறும் உத்தரவாதத்தை வழங்க இஸ்ரேல் மறுத்து வருவதாக ஹமாஸ் குற்றம்சாட்டுகிறது.

மறுபுறம் ரமழானில் பிராந்தியத்தில் வன்முறையை தூண்டுவதற்கு ஹமாஸ் முயற்சிப்பதாக மொசாட் குற்றம்சாட்டியுள்ளது. ஹமாஸை தோற்கடித்தால் மாத்திரமே போர் முடிவுக்கு வரும் என்று இஸ்ரேல் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்து வரும் பைடன் அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு கடந்த சனிக்கிழமை அளித்த பேட்டியில், ரமழானுக்கு முன் உடன்படிக்கை ஒன்றை எட்டுவது இன்னும் சாத்தியம் என்று கூறிய போதும் அது எவ்வாறு என்பதை குறிப்பிடவில்லை.

இதில் காசாவில் தொடரும் சண்டையில் இஸ்ரேலியப் பிரதமரின் அணுகுமுறையை பைடன் சாடியுள்ளார். 'இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு இஸ்ரேலுக்கு உதவவில்லை... இஸ்ரேலை காயப்படுத்துகிறார்,' என்றார்.

இஸ்ரேலைத் தற்காக்கும் உரிமை நெதன்யாகுவுக்கு இருந்தாலும் ஹமாஸுக்கு எதிரான சண்டையில் அப்பாவிகள் உயிரிழப்பதை அவர் கருத்தில் கொள்ளவேண்டும் என்று பைடன் கூறினார். என்றாலும் இஸ்ரேலை தொடர்ந்தும் அமெரிக்கா தற்காக்கும் என்றும் பைடன் அந்தப் பேட்டியில் வலியுறுத்தினார். இந்த பேட்டியின்போது முரண்பாடான கருத்துகளை வெளியிட்ட பைடன், காசாவின் தெற்கு நகரான ரபா மீது இஸ்ரேல் படையெடுத்தால் அது நெதன்யாவுக்கான 'சிவப்பு எச்சரிக்கையாக இருக்கும்' என்று குறிப்பிட்டபோது, உடன் அந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார். இங்கு சிவப்பு எச்சரிக்கைகள் இல்லை என்றும் இஸ்ரேலை ஒருபோதும் கைவிட மாட்டேன் என்றும் கூறினார்.

இந்நிலையில் ரமழான் மாதத்தை ஒட்டி ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே வெளியிட்ட அறிவிப்பில், பலஸ்தீனர்கள் தமது சுதந்திரத்தை மீட்கும் வரை தொடந்து போராடுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் கடந்த சனிக்கிழமையும் அரச எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றன. சில ஆர்ப்பட்டக்காரர்கள் நெடுஞ்சாலை ஒன்றை மறித்த நிலையில் பொலிஸாரால் அவர்கள் அகற்றப்பட்டனர். காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நடத்திய பேரணி ஒன்றும் அங்கு இடம்பெற்றது. பணயக்கைதிகளை விடுவிக்கக் கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'வலியும் கோபமும் எனது இரத்தத்தில் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது' என்று காசாவில் இருந்து கடந்த நவம்பரில் விடுவிக்கப்பட்ட பதின்ம வயதான அகம் கோல்ட்ஸ்டைன் குறிப்பிட்டார்.

தொடரும் படுகொலைகள்

கடந்த ஆறு மாதங்களாக காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போர்து 31,045 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 72,654 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் கொல்லப்பட்ட சுமார் 72 வீதமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

'கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் காசா பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு எதிராக நிகழ்த்திய ஏழு பழுகொலை சம்பவங்களில் 85 பேர் உயிர்த் தியாகம் செய்திருப்பதோடு 130 பேர் காயமடைந்துள்ளனர்' என்று சுகாதார அமைச்சு டெலிகிராம் பக்கத்தில் நேற்று குறிப்பிட்டது.

இந்த உயிரிழப்புகளில் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்த 25 பேரும் உள்ளடங்குகின்றனர்.

இதில் நுஸைரத் அகதி முகாமில் உள்ள இடம் பெயர்ந்தவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் குறைந்தது 13 பெண்கள் மற்றும் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் ஸீனா என்ற ஐந்து மாத பெண் குழந்தையும் ஓமர் என்ற ஆறு வயது சிறுவனும் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசா போர் பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் சூழலில் தெற்கு லெபனானில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் சனிக்கிழமை இரவு நடத்திய வான் தாக்குதலில் ஒரே குடும்பத்தின் ஐவர் கொல்லப்பட்டு மேலும் ஒன்பது பேர் காயமடைந்திருப்பதாக அந்நாட்டின் தேசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.